Registered as a News Paper    பக்கங்கள் 10    விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி

நாதம் 08 திருவள்ளுவர் ஆண்டு 2024 தை 09 (22-01-1993) வெள்ளிக்கிழமை ஓசை 839

## வெளிநாட்டுத் தபால்கள் எடுத்து வரப்படவில்லை

பருத்தித்துறையை நேற்று நண்பகல் வந்தடைந்த குமாரி கப்பலில் சுமார் 649 பொதிகள் வந்தபோதும் அதில் 293 பொதிகள் மட்டுமே தபால் இருந்தது ஏனைய 356 பொதிகளும் அஞ்சல் அலுவலகத்திற்குரிய காகிதாதிகள் என தெரியவருகின்றது. இந்த தபால் பொதிகளில் வெளிநாட்டுக்கடிதங்கள் வரவில்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளையாழ். குடாநாட்டின் தீவுப் பகுதி உட்பட (10ஆம் பக்கம் பார்க்க)

# உலகத்தமிழர் அமைப்புக்கள் இந்தியா மீது கண்டனம்

லண்டன்)

உலகத் தமிழர் அமைப்புக்கள் பல இந்தியா மீது கண்டனம் செய்துள்ளன. தளபதி கிட்டு பயணம் செய்த கப்பலை சர்வதேச கடற் பரப்பில் இந்தியா தடுத்து நிறுத்தியமை ஓர் அத்துமீறிய செயலென்றும், இதனால், விளைந்த அனர்த்தங்களுக்கு இந்தியாவே பொறுப்பேற்க வேண்டும் எனவும் அவை தமது கண்டனத்தில் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டுவ்வாரதில் இந்தியா நடந்து கொண்ட விதம் குறித்து பல உலக தமிழ் அமைப்புக்கள் இந்தியா மீது கண்டனம் தெரிவித்துள்ளன. இது தொடர்பாக இந்திய பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் அவை தமது கண்டன மகஜர்களையும் அனுப்பியுள்ளன.

இவ் அமைப்புகள் அனுப்பிய கண்டன அறிக்கைகளில் இந்தியா தமிழ் மக்களுக்கு எதிராகத் திட்டமிட்டுச் செயற்படுவதாகவும், விடுதலைப் புலிகளின் கப்பலை வழி மறித்து கைப்பற்ற முயற்சித்தமை ஓர் அத்துமீறிய செயல் எனவும் தமதுகண்டனமகஜரில் தெரிவித்துள்ளன.

## கிளாலி-பூநகரி படகுசேவை

கிளாலி-பூநகரி படகுசேவை இன்று வெள்ளிக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்த்துறையினர் அறிவித்துள்ளனர்.

## ஒரு வாரத்தில் 'குமண' வரும்

இன்னும் எட்டு தினங்களில் அத்தியாவசியப் பொருள்களு [10 ஆம் பக்கம் பார்க்க]

கிளாலி படகுமீது தாக்குதலில்

## காயமடைந்த எவரும் மன்னார் ஆஸ்பத்திரியில் இல்லை

[மன்னார்]

மன்னார் மாவட்ட ஆஸ்பத்திரியில் கிளாலி சம்பவத்தில் எவரும் அனுமதிக்கப்படவில்லை என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இம் மாதம் இரண்டாம் திகதி கிளாலி கடற்பரப்பில் நடைபெற்ற தாக்குதலினால் காயம் அடைந்த சிலர் மன்னார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாக வெளிவந்த செய்திகளுக்கு அவர் மறுப்புதெரிவித்தார். இப்படியான செய்திகள் பலருக்கு வீண் அலைச்சலையும், ஏக்கத்தையும் கொடுக்கும் என்றார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்; மன்னார் ஆஸ்பத்திரி பல குறைகளுடன் இயங்கும் போது இங்கு ஏன் காயப்பட்டவர்களை கொண்டுவர வேண்டும் என்றார்.

இராணுவ நடவடிக்கையால்

## உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு 100 லட்சம் நிதி ஒதுக்கீடு

யாழ். குடாநாட்டின் அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளினால் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கவென அரசினால் சுமார் நூறு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

கொழும்பில் இருந்து நேற்று யாழ். திரும்பிய யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் கொழும்பில்புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரிகளுடன் நடாத்தியபேச்சுக்களை அடுத்தேமேற்படி நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

## தடுத்து வைக்கப்பட்ட 40பேர் இன்று விடுவிக்கப்படுவர்

(யாழ்ப்பாணம்)

பலாலி மற்றும் களுத்துறை சிறையில் சிறிலங்கா அரசினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் நாற்பது தமிழ்க் கைதிகள் இன்று விடுதலை செய்யப்படவுள்ளனர்.

இதில் களுத்துறை சிறையில் இருந்து 25 பேரும் பலாலியில் இருந்து 15பேருமே இன்றுவிடுதலை செய்யப்படுகின்றனர். இவர்கள் குமாரி கப்பல் மூலம் ஏற்றிவரப்பட்டு பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைவர் என யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

## உயர்தர பரீட்சையின் முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

1992 ஆகஸ்டில் நடைபெற்ற க. பொ. த.(உயர்தர) பரீட்சையின் முடிவுகள் நேற்று வெளியாகின. பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் 'குமாரி' கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டு பாடசாலை பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டன எனவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் முடிகள் தபாலில் இடப்பட்டுள்ளன எனவும் யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன,

யாழ் இந்துக் கல்லூரியில்; ம. சிறீகரன், கேந்திரன், நாகரஞ்சன், யாழ். மத்திய கல்லூரியில்; கே கிருஷ்ணகுமார், சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் தாரகா டானியல், வேம் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசியப்பொருள்கள் 'குமாரி'யில் வந்தன

பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்த குமாரி கப்பலில் அரிசி 1000 மெற்றிக் தொன், மா 1700 மெற்றிக் தொன், சீனி 400மெற்றிக் தொன், பட்டாணிப் பருப்பு30 மெற்றிக் தொன், மைசூர்ப் பருப்பு 20 மெற்றிக் தொன், தேயிலை 20மெற்றிக் தொன், சவர்க்காரம் 10 மெற்றிக் தொன், மண்ணெண்ணெய் 245பரல்கள், டீசல் 30 பரல்கள் ஆகியவை எடுத்து வரப்பட்டன. உணவுப் பொருள்கள் இறக்கும் வேலைகள் நேற்று ஆரம்பமானது.

இதேவேளை ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான ஜனவரி மாதத்திற்குரியவவுச்சர்களும், 4500 தேசிய அடையாள அட்டைகளும் எடுத்துவரப்பட்டுள்ளன. இவை விரைவில் விநியோகிக்கப்படும்.

இக் கப்பலில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும் வந்து சேர்ந்தார். (யோ) (மா)

## காவலரண்மீது தாக்குதல் இராணுவம் தப்பி ஓட்டம்

### இராணுவப் பொருள்கள் மீட்பு

பொலநறுவை மாவட்டம் அலம்வெவ கிராமத்தில் அமைந்திருந்த இராணுவ காவலரண்கள் மீது நேற்று முன்தினம் அதிகாலை விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

புலிகளின் தாக்குதலிற்கு ஈடுகொடுக்க முடியாத சிறிலங்கா இராணுவத்தினர் காயங்களுடன் காவலரண்களை கைவிட்டு தப்பி ஓடிவிட்டனர்.

இராணுவத்தினரிடமிருந்து இராணுவப் பொருள்களும், வெடிபொருள்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன அவற்றின் விபரம் வருமாறு;

★ மொபைல் செற் — 01
★ ரவைகள் — 887
★ ஜே.ஆர். கைக்குண்டு — 02
★ ஏ.கே. மகசின் — 03
★ ஏ.கே. வேஸ்சர் 01
★ இராணுவசப்பாத்து — 06 சோடி
★ சிவில் சப்பாத்து — 04 சோடி
★ இராணுவப்பட்டி — 01
★ தலைக்கவசம் — 01

## வெட்டுப் புள்ளியில் மாற்றம் எதுவும் இல்லை

### -நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

1990 இல் க. பொ. உயர்தர விசேட பரீட்சைப் பெறுபேறுகளின் வெட்டுப் புள்ளி குறித்து யாழ்ப்பாண பிரதேச மக்களால் மேல் நீதிமன்றில் போடப்பட்ட வழக்கு தள்ளுபடியானது.

இவ்வழக்கின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் வழக்குத் தாக்குதல்களை மேற்கொண்ட இருசாராரும் சமரசமாக தாமே பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ளும்படி மேல்நீதிமன்று உத்தரவிட்டுள்ளதாக கொழும்பில் இருந்து திரும்பிய அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் நேற்று தெரிவித்தார்.

மேற்படி பரீட்சையின் மூலம் பல்கலைக்கழகத் தெரிவுக்காக இரு வெவ்வேறு வெட்டுப் புள்ளித் திட்டங்கள் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டன இதனால் விசேட பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியில் பாரபட்சமாக நடாத்தப்பட்டனர். இப்பாரபட்சத்தால் பல மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெறத்தவறிவிட்டனர். இதை எதிர்த்தே மேற்படி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. எனினும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் வெட்டுப்புள்ளித் திட்டத்துக்குச் சாதகமாகவே நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (5)

## கப்பலில் பொருள் மோசடி; தடுக்க 'சீல்' வைக்கும் முறை

வடபகுதிக்கு கப்பலில் வரும் அத்தியாவசியப் பொருள்கள் மர்மமாக மறைவதைத் தடுப்பதற்கு புதிய திட்டம் ஒன்று நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுகத்தில் வைத்து கப்பலில் பொருள்கள் ஏற்றப்படும் போது அனைத்துப் பொருள்களும் "சீல்" பண்ணப்பட்டிருக்கும். இக்கப்பல் வடபகுதித் துறைமுகங்களை அடைந்ததும் வடபகுதியில் உள்ள மாவட்டச் செயலகங்களின் புனர்வாழ்வுப் பகுதியின் உயர் அதிகாரி துறைமுகத்துக்குச் சென்று பொருள்களைப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். கப்பலில் இருந்து தினமும் பொருள்கள் இறக்கப்பட்டதும் மீண்டும் "சீல்" இடப்படும். பின்னர் மறுநாள் மீண்டும் "சீல்" உடைக்கப்பட்டு இறக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். இதனால் மேற்படி உயர் அதிகாரி கப்பல் துறைமுகத்தில் தரித்து நிற்கும் காலத்தில் தினமும் துறைமுகம் சென்று திரும்ப வேண்டியிருக்கும்.

அத்துடன் கப்பலில் வரும் அனைத்துப் பொருள்களும் சுங்கத் திணைக்களத்தினூடாகவே மாவட்டத்திற்குள் எடுத்துச் செல்லப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வரி விளம்பரம்

### கடிகாரமா ? ரேடியோவா ?

உங்கள் கடிகாரங்களை, றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள். [சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.] தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டிலக்சா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி. [வானவில் கூல்பார் அருகாமையில்] யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. [சி-5795]

### நீதி நூல்கள்

ஆத்திசூடி, கொன்றைவேந்தன் பிரதியொன்று அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ள 25 மில்க்வைற் சலவைத்தூள் வெற்றுப் பக்கற் சேர்ப்பிக்கவும். மில்க்வைற் (சி/5848)

### வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை "ஹோமியோபதி" சங்கத்தின் 34 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 9-30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதி 35-ம இலக்க மனையில் அமைந்துள்ள மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு உரிய அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## சகலகலா வல்லவன்

சேர்ப்பிக்குமாறு கோரி சென்னைமத்திய சிறையிலேயே தளபதி கிட்டு காலவரையற்ற உண்ணாவிரதத்தை மேற்கொண்டான். தமிழக மக்கள் கொதித்தெழுந்து விடுவார்கள் என்று அஞ்சிய இந்திய அரசு தளபதி கிட்டுவின் போராட்டத்துக்குஅடிபணிந்து அவனைதமிழீழத்துக்கு கொண்டுவந்து விடுதலை செய்தது.

இந்திய - விடுதலைப்புலிகள் போராட்டம் கடுமையாக நடைபெற்றுக் கொண்டிருந்த அந்த வேளையில் தளபதி கிட்டு வன்னிக் காட்டுக்குச் சென்று தலைவர் பிரபாகரன் அவர்களை சந்தித்து அங்கிருந்தபடி இயக்கப்பணிகளில் ஈடுபட்டான்.

1989 இல் சிறிலங்கா அரசுடன் பேச்சு வார்த்தை நடந்த வேளையில் பேச்சு வார்த்தைக்கென கொழும்பு சென்ற தளபதி கிட்டு அங்கிருந்து இங்கிலாந்து சென்று அங்கிருந்து விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுப் பிரிவுக்குப் பொறுப்பாளனாக செயற்பட்டான். வெளிநாட்டுப் பிரிவுப்பொறுப்பாளனாக இருந்து செயற்பட்ட 3 ஆண்டுகளில் தளபதி கிட்டு ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதவை; எடுத்து உரைக்க இயலாதவை. வெளிநாட்டுப் பொறுப்பாளராக தளபதி கிட்டு பொறுப்பேற்றதும் அது வரை மந்த நிலையிலிருந்த செயற்பாடுகள் துரிதமாகின. வெளிநாடுகள் விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர்களிடையே நிலவிய கருத்து வேறுபாடுகள் முரண்பாடுகளைத் தீர்த்து வைத்து வைத்தான்.

வெளிநாட்டிலிருந்த வேளையிலும் தமிழகத்திலிருந்து செயல்படுவது போல ஒவ்வொரு சிக்கலுக்கும், நெருக்கடிக்கும் எப்படி எப்படி நடந்தால் சிக்கல்களைத் தீர்க்கலாம். நெருக்கடிகளிலிருந்து விடுபடலாம் என்று தமிழீழத்தில் இயங்கிய தோழர்களுக்கு அறிவுறுத்துவதற்கு தளபதி கிட்டு தவறவில்லை.

தளபதி கிட்டு வெளிநாடுகளில் இருந்து செயற்பட்ட காலத்தில்கூட தமிழீழத்தை, இயக்கத்தை இயக்கத் தலைவரை எவ்வாறு நேசித்தான். போராளிகளின் நலன்களில் எத்தகைய அக்கறை கொண்டிருந்தான். தமிழீழப் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப தமிழீழச் சிறுவர்களின் நலன்களைக் காக்க, தமிழீழ மக்களின் இடர்கள், இன்னல்களைக் களைய எத்தகைய ஆர்வத்தை அவாவினைக் கொண்டிருந்தான் என்பதற்கு அவன் எழுதிய மடல்களே சான்றுகளாகத் திகழ்கின்றன.


தளபதி கிட்டுவினது அயராத உழைப்பும், அஞ்சாத தீரமும், உள்ளார்ந்த செயற்பாடும் எதிரிகளும் வியக்கின்ற வகையில், மதிக்கின்ற வகையில் அமைந்திருந்தன.

1987 ஒகஸ்டில் இந்தியாவின் தலைநகர் டெல்லியிலிருந்து தலைவர் பிரபாகரன் அவர்களை சென்னைக்கு அழைத்து வந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கறுப்புப் பூனைகள் பலர் சென்னையில் தளபதி கிட்டுவைக் காண்பதில் காட்டிய ஆர்வம், கிட்டுவின் செயற்பாடுகள் வெளியுலகறியுமளவுக்கு வளர்ந்திருந்தது என்பதை உணர்த்தும் வகையில் இருந்தது.

மக்களோடு பழகுவதில் தளபதி கிட்டு கொண்டிருந்த அணுகுமுறை அவனை மக்கள் தலைவனாக ஆக்கியது. 19 வயது இளைஞனாக இயக்கத்தில் இணைந்த தளபதி கிட்டு சாதாரண வீரனாக களத்தில் இறங்கி நடத்திக் காட்டிய வீரச் செயல்களும், அவனது அஞ்சாத வீரமும் தான் அவனை மத்திய குழு உறுப்பினனாக, மாவட்டத் தளபதியாக, வெளிநாட்டுப் பிரிவுப் பொறுப்பாளனாக, கேணலாக உயர்த்தி வைத்தது.

போராட்டக் களத்தில் மட்டுமன்றி அரசியல் அரங்கிலும் பொருளாதார முனையிலும், சமூகப் பணியிலும், இயக்க நலன் காப்பதிலும், மக்கள் ஆதரவையும், அன்பையும், பெறுவதிலும் எமது மூத்த தளபதிகேணல்கிட்டுகொண்ட ஈடுபாடும், பெற்ற வெற்றிகளும் மக்கள் நினைவிலிருந்து என்றுமே அகலாது. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் அதிக பக்கங்கள் கேணல் கிட்டுவினதாகவே இருக்கும் என்பது திண்ணம்.

## தளபதி கிட்டண்ணாவுக்கு எமது செந்நீர் அஞ்சலி



### கேணல் கிட்டு

(சதாசிவம் கிருஷ்ணகுமார்)

மகாத்மாவைத்தான் இந்தியாவென நம்பினோம். குமரப்பா பன்னிருவர் வீரமரணத்தின்பின் காந்திக்குள் ஒளித்திருந்த நயவஞ்சகத்தை தெரிந்தோம். தியாக தீபங்கள் திலீபன், அன்னை பூபதிக்குப்பின் ஈவிரக்கமற்ற கொலைகாரக் கும்பல், அகிம்சைபேசும் அயோக்கியர்கள், மனித இரத்தம் குடிக்கும் காட்டேறிகள்தான் இந்தியா என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

சர்வதேசக் கடலனைத்தும் தனக்கே என்ற ஆணவத் திமிர் கொண்டவன் இந்தியா என்பதை உலகறியவைக்க உன்னையே தமிழ் அன்னைக்கு அர்ப்பணித்துக்கொண்ட மறத்தமிழ்க் குலத்துதித்த மான மறவனே! கிட்டு உனக்கும் உன்னோடு மரணித்த ஒன்பதின்மருக்கும் எங்கள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க வடமராட்சிக் கிளை.

(4122)

## வட்டு. இந்துவில் திருட்டு

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் பதினையாயிரம் ரூபா (15,000/-) பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. விளையாட்டுஉபகரணங்கள் வைக்கும் கல்லூரிக் களஞ்சிய அறையிலிருந்தே 11 ஹொக்கி துடுப்புகள் 4 உதைபந்துகள் 3 கைப்பந்துகள் உட்பட மற்றும் பல உபகரணங்கள் களவாடப்பட்டுள்ளன. (42)

## நிர்வாகிகளாக தெரிவு

ஏழாலை மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது. தலைவராக த. அப்பலிங்கமும், உப தலைவராக ச. வேல்மாறனும், செயலாளராக ச பத்மநாதனும் பொருளாளராக செ. உதயகுமாரும், உப செயலாளராக அ. ரவீந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர், (11) (09)

## 60ஆம் நாள் நினைவு அலைகள்



### லெப்டினன்ட். லீலா (கந்தையா கலாஜினி)

(தம்பிராய் பூநகரி)

பூவாய் மலர்ந்தது 18-05-1878 — விதையாய் வீழ்ந்தது 24-11-1992

அண்ணன்மார் எண்மர் முன்னிருக்க
அக்காமார் மூவர் உன் முன்னிருக்க
பன்னிருவராய் நீ எம் பாசத்தில் இணைந்து
கொண்டாய்

கடைக்குட்டியாக நீ கலகலத்து எம்
குடும்பத்தில் கலாவானாய்
முதற் புலியாய் எம் குடும்பத்தில்
புறப்பட்ட லீலாவாய்
மாவீரர் வாரத்தில் நீயும் ஒரு மாவீரரானாய்
உயர்ந்து விட்டாய் எம் குடும்பத்தில் ஒளி விளக்காய்
கலங்குகின்றோம் நாமிங்கு கண்ணீரில் நீர்
வற்றுமட்டும்
காலமெல்லாம் வாழ்கின்றோம் உன் நினைவுடனே
நாமிங்கு

இவருடன் பலாலியில் வீரச்சாவடைந்த அனைத்து வேங்கைகளுக்கும் எமது வீர அஞ்சலிகள்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(4124)

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தவர்கள்

## நினைவு கூருகின்றோம்..

### 1993-01-22

1989 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு - கொக்குவில் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**தவராசா**

கிளிநொச்சி - ஆனையிறவுப் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதக் குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**தங்கராசா** [ஆறுமுகம் அருமைநாயகம் - முரசுமோட்டை, பரந்தன்- கிளிநொச்சி]

1990 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**நியூட்டன்** [கந்தையா பூபாலசிங்கம் - செட்டிகுளம் - வவுனியா]

திருக்கோணமலை - தம்பலகமம் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் தயான்** [தியாகராசா கதிர்காமத்தம்பி - 3-ம் வட்டாரம், ஆலங்கேணி, கிண்ணியா, மூதூர் - திருக்கோணமலை]

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வந்தாறுமூலை, களுவங்கேணியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1992 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - முருகுப்பிட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/5846)




மணலாற்றின் போராளிகளுக்கு அவன் நல்லவன்; கெட்டிக்காரன்; அடிபாடுகளில் மிகவும் திறமையாக செயல்படுவான். மெலிதான உடலாக அவனை பார்ப்பதற்கு தெரிந்தாலும் சண்டைகளில் கட் பொசிசனில் எல். எம். ஜி யை பிடித்த வண்ணம் சுட்டுக் கொண்டு முன்னேறி இராணுவத்தை வீழ்த்துவான் அவன் தான் எல். எம ஜி அக்பர்

விடியலுக்கு முந்தியசாவுகள் விடுதலைப்புலிகள் வரலாற்றில் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆம் இந்நிகழ்வுகளில் தான் மணலாற்றில் இன்று ஏ கே.எல். எம்.ஜி அக்பரும் இணைந்துவிட்டான். எங்கோ அவன் எம்மை விட்டு தொலைதூரம் சென்றதாக ஓர் உணர்வு போராட்டக் களங்களில் போராளிகளின் இழப்பால் துயருண்டு கனத்த இதயத்தில் இன்று இவனின் பிரிவு தனியிடத்தில், ஆனாலும் அம் மண்ணிலும் போராளிகளின் மனத்திலும் மணலாறு மாவட்ட மரங்களுக்கு கூட அவனின் குறும்புத்தனங்களும், சந்தோஷ விளையாட்டுக்களும் களத்தில் சலனம் இன்றி செயல்படும் துடிப்பும் வீரத்தின் விளைவுகளும் நீங்காத நினைவுகளாய் பதிந்து விட்டன. ஒரு போராளியின் இழப்பு ஒவ்வொரு போராளிகளின் மனத்திலும் தான் ஏதோ பறிகொடுக்க கூடாததை இழந்துவிட்டதாக அவர்களின் மாறாத தவிப்பின் வெளிப்பில் தெரியும். அது போலவே இன்று அக்பரின் இழப்பும்,

மட்டக்களப்பில் முறக்கொட்டாஞ்சேனைக் கிராமம் தான் அக்பரின் பிறப்பிடம் சதீஸ்குமார் என்பது அவன் இயற்பெயர் சிங்களப்படைகள் மட்டக்களப்பு மண்ணில் செய்துவரும் கொடுமைகளுக்கு போராட்டமே சிறந்தது எனமுடிவு செய்தான் அதனால்தான் எம் மக்களின் பாதுகாப்பை எம்மால் உறுதி செய்ய முடியும் என்றுணர்ந்தான். 1988 இன் ஆரம்பத்தில் இயக்கத்தில் இணைந்தான் அதே ஆண்டில் மூதூரில் விடுதலைப்புலிகளின் 10 வது முகாமில் பயிற்சிகளை முடித்து களத்தில் இறங்கினான்.

அக்காலப்பகுதியில் இந்தியப்படையுடன் விடுதலைப் புலிகள் போரிட்டுக் கொண்டிருந்தனர். அக்பரும் இந்தியப் படைகளுக்கு எதிரான தாக்குதல்கள் சிலவற்றில் பங்கு கொண்டான் பின் இந்தியப் படை ஈழமண்ணைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கையில் தேசவிரோதிகளை அழிப்பதில் அக்பரும் ஈடுபட்டான். இதன் பின்புதான் 1989 ஆம் ஆண்டில் புலிகளின் அணி ஒன்று மணலாறு மாவட்டத்திற்கு வந்தது. அதனுடன் தான் அக்பரும் மணலாற்று மண்ணில் தனது கால்களைப் பதித்தான். இத்துடன் இவனின் செயல்பாடு மணலாற்றில் தொடர்ந்தது. அக்பர் ஏ .கே. எல். எம் ஜி யுடன் தான் அதிகம் விருப்பம் கொண்டவன். அவ் ஆயுதத்தை துடைத்து துணியினால் எப்போதும் மூடிய வண்ணமே வைத்திருப்பான். அந்த எல். எம்.ஜி சண்டைகளில் அவனுடைய விருப்பத்தை நிறைவேற்ற தயங்குவதில்லை. அக்பர் மணலாறு மாவட்டத்திற்கு வந்த சில மாதங்களில் இந்தியப்படைகள் முற்றாக ஈழமண்ணை விட்டு வெளியேறின.

11-06-1990 இல் மீண்டும் இலங்கை படைகளுடன் இரண்டாம் ஈழப்போர். தொடங்கியது அக்பரின் எல்.எம்.ஜிக்கும் வேலைகள் அதிகமாயின. இந்தியப்படைகளுக்கு மணலாற்றில் புலிகள் மறக்கமுடியாத பாடம் புகட்டியதுடன் அங்குள்ள மரம் செடிகொடிகளும் கூட தங்களின் மண் மீதான ஆக்கிரமிப்பை உடைக்க பெரும் எதிர்ப்பை காட்டியது. தொட்ட இடமெல்லாம், கால்வைத்த இடமெல்லாம் வெடிகுண்டுகள் - இந்தியப்படைகளின் கால்களும், உடல்களும் சிதற அதிர்ந்தன. உலகில் நான்காவது பெரியபடை ''பிச்சை வேண்டாம்நாயைபிடி'' என்ற அளவில் ஓடியது - இதனால் நிலைகுலைந்த இராணுவத்தினர் மணலாற்றில் புலிகள் இல்லை பேய்கள்தான் வாழ்கின்றன என்று சொல்லும் அளவிற்கு மணலாற்றுமண் தன்வரலாற்றை எழுதியது.

அன்று ஒரே ஒரு பண்டார வன்னியன் பிரிட்டிஷ் படை கலங்க மணலாற்றுகாடுகளில் உலாவந்தான். இன்று ஆயிரமாயிரம் பண்டாரவன்னியர்கள் இந்தியப் படைகளுக்கு சிம்மசொப்பனமாக அக்காட்டில் எழுந்தனர். இவர்களின் பின்பு இன்று இலங்கைப் படைகளுக்கு பாடம் புகட்ட மணலாறு தன்னை தயார் படுத்தியது. இம்மண் வெறும் நிலமல்ல தமிழீழத்தின் இருதயம் ஆகும். இதை நசுக்க முற்பட்ட சிங்கள இராணுவத்தினர் அடிக்கடி புலிகளின் துப்பாக்கிகளுக்கு இரையாக தொடங்கினர். அதில் அக்பரின் ஏ. கே. எல். எம். ஜி யும் பங்கெடுத்தது. இவனது இயந்திரத் துப்பாக்கி காணாத மணலாற்று எல்லைப்புற முகாம்களே இல்லையென்று கூறுவதற்கேற்ப இவன் எல்லாத் தாக்குதல்களிலும் பங்கெடுத்தான். தினமும் சிங்கள இராணுவத்தினர் புலிகளின் கடுமையானதாக்குதல்களைஎதிர்கொள்ள வேண்டிய நிலைக்குதள்ளப்பட்டனர் இலங்கை அரசும் இவர்களை புலிகளின் மரணவலைக்குள் தள்ளிக்கொண்டே இருந்தது. இதைப்புரியாது பணத்திற்காக சண்டையிடும் இராணுவத்தினர் புலிகளின் விடுதலை உணர்விற்கும், உறுதிக்கும் முன்னே சிறுதூசுளாகவே இருந்தனர்.

மணலாறு ஒரு வளமான மண். இதை அபகரிக்க இலங்கை அரசு தனது படைகளின் உதவிகளுடன் தன் இன வெறிப்பாதங்களை அம்மண்ணில் படிப்படியாக பதித்து குடியேற்றங்களை நிறுவியது. இதை நிறுத்த புலிகள் திடசங்கற்பம் கொண்டனர். சிங்கள வெறியர்களை அடித்து துரத்தினர். அன்று இப்படிச் சிங்கள குடியேற்றவாசிகளை கதிகலங்க வைத்தவர்களில் நவம், லோறன்ஸ், சபா ஆகியோருடன் இன்னும் பல நூறு புலிகள் அம்மண்ணின் சுபீட்சத்திற்காய் போராடி மாவீரராகினர். இன்று இவர்களின் உணர்வுகளை தாங்கிய புலிகள் போராடி அம்மண்ணின் விடிவுக்காய் சாவை அணைக்கின்றனர்.

அக்பர் இம் மாவட்டத்தை சாராதவன் என்றாலும் எங்கென்றாலும் எம் ஈழமண் எவர் என்றாலும் தமிழ் மக்கள். ஆதலால் இம்மண்ணின் காவலாளியாகத் தான் அக்பரும் போராடினான். அக்பர் மணலாற்றில் கரையோர முகாம்களில் தங்கவே அதிகமாக விரும்புவான். அப்படியான முகாம்களுக்கு அவனையும் அவனது குழுக்களையும் போகும்படி தளபதி பணிப்பாராயின் மிகவும் சந்தோஷத்துடன் தான் அங்கு போய்ச் சேருவான். அவன்புறப்படும் இடத்தில் இருந்தே அங்கு போய் செய்ய வேண்டிய வேலைகளை மற்றைய போராளிகளுக்கு கூறுவான்.



கப் அன்பரசன்/அக்பர்

அவ்வளவு கூடுதலான பிரியத்தை அம்முகாம்களில் வைத்திருப்பான். அதற்கு காரணம் உண்டு.

கரையோர முகாம்களில் தென்னம் தோட்டங்கள் உள்ளது. இதனால் இளநீருக்கு பஞ்சம் இல்லை. கடல்குளிப்புக்கும் விளையாட்டுக்கும் குறைவில்லை. இரவோடு இரவாக கடல் ஓரங்களில் உள்ள பாறைகளின் வெடிப்புகளுக்குள் இருக்கும் நண்டுகளை டோச்லைட் வெளிச்சத்தில் ஊசிக்கம்பியால் குத்தி அவற்றை சேர்த்து வந்து சமையல் செய்து ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் போராளிகளையும் எழுப்பி அவர்களுடன் சேர்ந்திருந்து உண்ணுவான் அதன் பின்பே அக்பர் நித்திரைக்குப் போவான். இதனால் தான் அம்முகாம்களில் அவன் தங்குவதற்கு விரும்புவதுண்டு. உப்புவெளிகளில் மாலையான நேரத்தில் கிளித்தட்டு விளையாடுவதற்கு ஆட்களைச் சேர்த்தெடுப்பான். விளையாட்டு என்றால் முதலில் வருவது அவன்தான். எப்பொழுதும் எல்லோரிடமும் கலகலப்பாகவும் சிரிப்பூட்டும் கதைகளுடனுமே சேர்ந்திருப்பான். போராளிகள் இவனது பகிடிக் கதைகளைக் கேட்பதற்காகவே இவனுடன் கூடிவிடுவார்கள். இவன் கதைக்கும் போது எழும் சத்தம் உரலில் உலக்கை போடும்போது எழும் ஓசையாகவே இருக்கும்-இதை எங்களுடைய தளபதி அடிக்கடி கூறி அவனையும் எல்லோரையும் சிரிக்கவைப்பார். அவரின் அன்புடனும் அதேநேரம் கண்டிப்புடனுமே வளர்ந்த போராளிகளில் அக்பரும். ஒருவன் குறும்புத்தனங்களும்விளையாட்டுக்களும் எவ்வாறுஉள்ளதோ அதேபோல் தான் வீரத்திலும்சிறந்து விளங்கினான். இவன்மணலாற்றில் இலங்கை இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட மின்னல் தாக்குதல் நடவடிக்கையில் இருந்து இன்னும் பல முகாம் தாக்குதல்களின்போதும் பலமுறைகள் காயப்பட்டவன். அதற்காக யாழ்ப்பாணம் சென்று காயங்கள்மாறியதும் மணலாற்றுக்கு வந்து சண்டையிடும் குழுவில் இணைந்து கொள்வான் இது தான் அக்பரின் குணவியல்புகள்.

1992இல் ஆரம்பத்தில் இவனுடைய பெற்றோர்கள் மட்டக்களப்பில் இருந்து எத்தனையோ கஷ்டங்களுக்கும் இராணுவத்தின் சோதனைகளுக்கும் மத்தியில் வந்து இவனைப் பார்த்து விட்டு சென்றனர். ஆனால் மறுபடியும் மணலாற்றுக்கு அவர்கள் வந்தால் அவனை உயிருடன் பார்க்க முடியாது அவனுடைய கல்லறையைத்தான் பார்க்க முடியும்.

ஆம் இன்று எங்களின் அக்பர் எங்களுடன் இல்லை- ''மறுகா போவோம்'' 'மறுகா வாடா' என்று மட்டக்களப்பு பாசையில் பகிடியாக கதைப்பதற்கு அக்பர் இன்றில்லை. அவன் எம்மை விட்டு பிரிந்து விண்ணில் வாழும் மாவீரர்களுடன் சேர்ந்துவிட்டான். ஆனால் அவனில்லாமல் எங்கள் முகாம்கள் அனைத்தும் வேதனையைத் தருகின்றன. எத்தனையோ தடவைகள் காயப்பட்டுத் தப்பியவன்.

24-08-1992 அன்று அலம்பில் முகாம் தகர்க்க சிரித்த முகத்துடன் சந்தோஷமாகப் போனவன்- மீண்டு வரும் போது அவனையும் அவனது எல். எம். ஜி. யையும் அவன் தோழர்கள் தூக்கிய வண்ணம் முகாமிற்குவந்தனர். அக்பர்வீரச்சாவடைந்து விட்டானாம். இந்த சண்டையில் நீ சாவாய் என்று அக்பரை பார்த்து ஒவ்வொரு சண்டையிலும் தளபதி பகிடியுடன் சொல்வார். ஆனால் மீண்டும் அவன் வருவான். ஆனால் இன்று உண்மையாகவே சாய்ந்து விட்டான் இவனது இழப்பும் எல்லாப்போராளிகள்மனத்திலும் வேதனையை ஏற்படுத்தியது. விடியலுக்காய் காத்திருந்தவன் புலரும் முன்பே சருகாகி விட்டான்

இன்று அவன் பிடுங்கித் தந்த இளநீர் சமைத்துத் தந்த நண்டுக்கறி, உப்புவெளிகளில் விளையாடிய விளையாட்டுக்கள் கடலில் நேரம் போவது தெரியாமல் நீந்தி விளையாடியது எல்லாம் மறக்க முடியாத நினைவுகளாகி விட்டன. இன்று மணலாறு மக்கள் தமது நிலத்தைப் பாதுகாக்க ஆயுதங்களை எடுத்துள்ளனர். புலிகளும் மக்களும் இன்று ஒன்றாகி காவல் காக்கின்றனர். இவர்கள் அக்பரின் கனவுகளுடன் அம்மண்ணின் விடிவுக்காய் களமாடி சாவை அணைத்த நூற்றுக்கணக்கான மாவீரர்களின் கனவுகளையும் சுமந்து கொண்டு விடியலின் பாதையில் விரைகின்றனர்.

கப்டன் அக்பரின் ஏ. கே. எல்- எம். ஜி இதோ ஒரு போராளியின் கரத்தில் தவழ்கின்றது. ஆனால் அவனது நினைவுகள் மணலாற்று மண்ணிலும் மக்களிலும் மரம் செடிகொடிகளிலும் மறையாத தென்றலாய் தவழ்ந்து கொண்டிருக்கப் போகின்றது. மணலாற்று மண் தன் வரலாற்றில் அக்பரையும் அணைத்துக் கொண்டது.

❋ சிந்தா ❋

## பொங்கி எழப் பணித்து போயினையோ

பாடிக் களித்த குயில் படகோடு சாகடிக்க
வாடிக் கிடந்த வடநாட்டு வேட்டுவரின்
மோடி அதிகார ஆட்சிக்குப் பணியாது
பாடவைத் துன்னுடலை ஆகுதி
யாக்கினையோ ?

வாடிக் கிடக்கும் நம் தமிழீழ தேசத்தை
தேடியெவர் தேற்றவல்லார் ஈழமது விட்டு
ஓடிக்களைத் திருந்து உண்டு களை
தெளிந்து
ஆடிக் கடல் நடுவே எமதூதர் வந்தாரோ?

கைபர் கணவாயும் கால வரலாறும்
பையவே பைந்தமிழர் வரலாற்று வேட்டும்
பொய்யாமோ? இன்றுமிது புரியாத தமிழா
ஐயோ இன்னுமென்ன இடிவீழ்ந்தபின்னும்?

செந்தமிழீழத்தின் திசையெங்கும் தீப்பற்றி
செந்தணற்காடாக மாற்ற நினைத்தாலும்
இந் தியத்தின் ஆதிக்கம் இங்கு
பலிக்காதெனவே
பொங்கிஎழு எனப் பணித்து போயினையோ
கிட்டு

- வளவை வளவன்

## “ஊழிக் கூத்தாடினரோ”

ஆழிக் கடலினிலே ஊழிக்கூத் தாடினரோ
அறங்காத்த காவலரென் றறைந்திடு
மதிமூடர்
கோழைகள் பாரதத்தாய் கொலுவினைச்
சரித்துவிட்டார்
வேளை பார்த்தெங்கள் வேங்கைகளை
வேட்டையாடி
மாழக் கடல்மடியில் மாபா தகம்புரிந்தார்
ஆழத் திரைகடலும் அழுமோசை
அலையலையாய்
நாளெலாம் பொழுதெலாம் நாடெலாஞ்
செல்லுமடா
அழித்தாய் தன்மடியில் நீலத்துயில்
கொள்ளும்

அருமை மகன்வீரன் அமராடிக்
களங்கண்ட
நாளை நினைத்துருகி நாளெல்லாம்
அழுதிடுவாய்
காளைகள் ஐயிருவர் கதைகதையாய்
சொல்லிடுவாள்
ஈழத் தமிழர்சினம் எறியம்பாய்ப்
பாரதத்தின்
இரும்புத் திரையதனைக் கிழித்து
முகங்காட்டும்
வேழமெங்கள் தளபதியாம் கிட்டுவைக்
கொன்றுவிட்டாய்
விலை கொடுக்க முடியுமோடா
வேட்டுவனே கூறிவிடு

- முல்லைக்கவி

சிறுகதை

# பரிமாணங்கள்

## கி.சிவஞானம்

"முகுந்தன் முகுந்தன் இஞ்சையொருக்கா ஓடிவா மசசான். கெதியாய் வாடாப்பா'' உரிமையோட ஒலித்த கருணாவின் குரலினால் திடுக்கிட்டுகண்முழித்தவன் எழும்ப மனமின்றிஒருதரம் கைகாலை வளைத்து நெட்டி முறித்து புரண்டு ஒருக்களித்து படுத்தான்.

இரவு கனநேரம் படித்த அலுப்போ என்னவோ ''ஏன்ராப்பா இந்தக் காட்டுக் கத்தல் கத்தினாய்'' என்றபடி முகுந்தன் எழும்பி கருணாவுடன் கதைத்தபடி வருவதுகத வீனூடு தெரிஞ்சுது.

''மச்சான் உவ்வரை சும்மா விடக்கூடாதுபொல்லாத ஆள் பார்ப துங்கிற வடிவை ...'' என்ற முகுந்தன் சுரேசைப் பார்த்தான். அவன் அவர்களின் கண்களைப்பார்த்தான். அவை கொஞ்சம் வெளிறிப் போயும் கோபத்தாலை சிவந்து இருக்கிறமாதுரியும் இருப்பது போலிருக்கவே மேலே நிமிர்ந்து, கால்மாட்டிற்குநேர் மேலே சுவரைப்பார்த்தான்

''சிலந்தி, சும்மா சிலந்தியில்லை, புலிமைச்சிலந்தி. உள்ளங்கையளவு இருக்கும். சரியான கொடூரமான விசமுள்ள பூச்சிதான். சுவரோடை அப்படியேஅப்பிப்போய்கிடந்தது. சுவரில ஒரு அசைவுமில்லை அவர்கள் தன்னைபார்ப்பதை அறியாத அந்தப் பூச்சிஅது குன்ரை எட்டுக்காலையும் கொஞ்சம் விரித்து சித்திரம் கீறி விட்ட மாதிரிக் கிடந்தது. படுக்கையிலிருந்து எழும்பி அவர்களைப் பார்த்தான் சுரேஷ்.

'அப்படியே பாஞ்சு வந்து அப்பிப்பிடிக்குமாம்' என்றமுகுந்தன் இரண்டடி பின்னுக்கு அசைந்து கவனமாய் நிலையெடுத்து நின்றான்.

எச்சரிக்கையாய், முகம் வெளிறிப்போய்நின்ற கருணா ஒருவித படபடப்போடு ''எங்கட பக்கத்து வீட்டு அண்ணைக்கு கடிச்சு, அந்தாள் பட்டபாடு. மேல் எல்லாம் தடிச்சு, கை,கால் குறட்டி இழுத்து அந்தமனிசன் பட்ட பாடு''என்று சொல்லி முடித்த அவனைப்பார்க்க அவன் அயலவர்கள் மீது கொண்டிருந்த அளவிடமுடியாத அன்பும்.கருணையும்வெளிப்படுவதுபோலிருந்தது. இதை உறுதிப்படுத்துமாப்போலிருந்தது. அவன் அநதசிலந்தியைஉறறுப்பார்த்துக் கொண்டிருந்த அவன்ரை கண்களில் தெரிஞ்ச கோபம்.

''அசையுதடாப்பா, அங்கை மேலே போகப்போகுதுபோல; உவரை விடக்கூடாது; விட்டால் இன்னும் எத்தனை பேரைக் கடிப்பாரோ, அதால எத்தனை சனம் கஷ்ரப்படும் தெரியுமே'' என்ற முகுந்தன் சுரேசைப்பார்த்தான். அது தனக்கு இந்த சனங்கள் மேல் எவ்வளவு அக்கறை - தன்ரை சமூகப் பொறுப்பை நீ விளங்கிக் கொண்டியோ என்பது போலிருந்து ''இல்லையில்லை அது அசையேல்லை. ஆள் நல்லாய் ஒட்டிப்போய் இருக்கிறார். ஆளை அப்படியே மடக்க வேணும். அடி ஒரே அடி. தப்ப விட்டியோ பிறகு ஆளில பாய்ஞ்சு ... சோதினையும் எழுதின பாடில்ல'' என்றான் கருணா.

அவர்களின் ஆர்ப்பாட்டத்தைக் கவனியாத சுரேஸ் கழண்டு போய்க்கிடந்த மேசையின் குறுக்குச் சட்டத்தை கையில எடுத்தான்.

''சீச்சி உதாலை ஒண்டும் செய்யேலா! சுரேஸ் நீ இப்ப, எல்லாத்தையும் குழப்பப் பே றாய்'' என்ற முகுந்தன் மிகுந்த பொறுப்போட யோசிக்கிற மாதிரி யோசிச்சான். ''உவருக்கு திறமான சாமான் விளக்குமாறு தான் எங்கடை அம்மா சொன்னவ'' என்றவன் பின்வளவை நோக்கி துள்ளிப்பாய்ஞ்சு வேகமாய் ஓடினான். அந்த வேகத்தில் அவனின்ரை சமூகப்பொறுப்புணர்வு துள்ளித் தெறிப்பது போலிருந்தது. கருணா பக்கத்து அறைக்குள்ள கிடந்த தும்புக்கட்டையைத் தூக்கிக் கொண்டு வந்து நின்றான்.

''தப்பவிட்டியளோ துலைஞ்சம் நாங்கள் கையள் காலுகள் குறட்டி. அந்தாள் பட்ட பாடு'' என்று திரும்பத் திரும்பத் முணுமுணுத்த முகுந்தன் விளக்குமாத்தை தூக்கி கவனமாய் நிதானித்து பக்கத்தில கிடந்த சாமிப்படத்தையும் ஒருக்கா திரும்பிப்பார்த்து நல்லாய் உள்ளுக்கு மூச்சை இழுத்து ஏலுமான அளவுக்கு ஓங்கி...முழுப்பலத்தையும் கூட்டி அந்த அப்பாவியாய் ஒடுங்கிப்போயிருந்த சிலந்தி மீது...

''ஓம்மச்சான் உவையளை தப்பவிட்டால் இன்னும் இன்னும் எத்தினை சீவனுகள் கஷ்ரப்பட வேணும்'' கருணா நிறைவோடு சொல்லிக்கொண்டான். அவனது முகத்தில் இப்போது ஒரு திருப்தி. முகுந்தன் வெற்றிவீரனாய் அவர்களைப் பார்த்து சிரித்துக் கொண்டான்.

★ ★

எட்டரைக்குப் பரீட்சை. சுரேஸ் சைக்கிளை எடுத்தான். நேரம் இப்ப எட்டுமணி. எப்பவும் நேரத்துக்குப்போய்ப்பழகிவிட்டது சுரேசிற்கு. நாங்கள் இன்னமும் ஒரு விசயத்தையும் நேரத்துக்கு தொடங்கப் பழகேல்ல என்றுஎண்ணியவனுக்கு பரீட்சையை மட்டும்தான்... சொல்லிவைச்சாப்போல நேரத்துக்கு எரிச்சல்தான் வந்தது அவனுக்கு ஜன்னலிற் கூடாக பார்த்தான். அவர்கள் இப்பதான் சப்பாத்து ''பொலிஸ்'' பண்ணிக்கொண்டிருப்பது தெரிந்தது.முகுந்தன் இபபவும் புலிமைச் சிலந்தியைப் பற்றிக் கதைப்பது கேட்டிது. அதைத் தப்பவிட்டிருந்தால் அது இந்த சனங்களுக்கு எவ்வளவு தீங்காய் முடிஞ்சிருக்கும் என்று அளந்து கொண்டிருந்தான்.

'நான் போட்டுவாறன்' என்றிழுத்த சுரேசைப் பார்த்து கருணாவும் முகுந்தனும் ''ஒரே குரலில்''ஓமோம் நீவெள்ளைக்காரன் பிள்ளை'' என்றனர். நக்கல் அவனுக்குத் தெரியும். வெள்ளைக்காரன்ரை நல்ல பழக்கத்தை எல்லாம் இவை எடுக்கமாட்டினம்...... கெட்ட பழக்கங்களைமட்டும் .கோபம் பொங்கிக் கொண்டுவர சுரேஸ் கேற்றைத் திறந்து சைக்கிளில் துள்ளி ஏறினான்.

சைக்கிளை ஊண்டி மிதிக்க உன்னியவனுக்கு திடீரென நெஞ்சு படபடப்பது போலிருந்தது காதுச் சவ்வெல்லாம் வெடிச்சிடும் போல தொடர் முழக்கம் கால்கள் உழக்கமறுப்பது போலிருக்கவேசைக்கிளை விட்டிறங்கிய சுரேஸ் வானத்தைப் பார்த்தான். ''ஒண்டையும் காணோம். அப்ப எப்பிடி சத்தம் மட்டும்'' சைக்கிளை மதிலோட சாத்திப்போட்டு வடிவாய்பார்த்தான். 'அங்கை பார்அந்தா அந்தத் தென்னங் குருத்துக்கு... மேலே உனக்கென்னடாப்பாகண்ணிலஏதாவது' என்றுசினந்தபடிசொன்ன முகுந்தன் காட்டிய திசையில் இரண்டு புள்ளிகள்... கண்கள் காணும் வரை பார்த்தான். ''என்ன வேகமடாப்பா, அதைவிடச் சத்தமெண்டால் இண்டைக்கு எங்கை யாவது''... என்ற கருணா ''உது சுப்பர் சொனிக்காய் தான் இருக்க வேணும்'' என்று அலுகதுக் கொண்டான். சத்தம் வரவர தேய்ந்து கொண்டு போய்க் கொண்டிருந்தது.

''அங்கைபார் திரும்பறான் மேலே எழும்பிறான். எடேய் குத்தப்போறானோ'' என்ற முகுந்தனின் முகம் பயத்தில ஒரு மாதிரிக்கறுத்துக்கொண்டு வாறது தெளிவாய்தெரிஞ்சுது

''வல்வையில எட்டுப்பேர் செத்தவை மச்சான் அதுவும் கோவிலுக்கை, நாவற்குழியில றோட்டைப் பிளந்து போட்டாங்கள். பாவம் ஒரு மனிசி தலை சிதறி...ஆறோஏழுபேருக்குக்க யமல்லே நிலைமையை விளங்காமல் கருணா தன்ரை பாட்டில சொல்லிக் கொண்டான் பலாலி நோக்கிப்போன அந்த இரண்டு சுப்பர் சொனிக்குகளும் திரும்பிஅண்டம் அதிர தொடர் முழக்கத்தோட ஒரு முறை யாழ் நகரப் பகுதியை கோண்டாவில், உரும்பராய் உள்ளிட்ட இடங்களையும்சேர்த்து வட்டமடித்துக் கொண்டிருந்தது.

''தம்பி பங்கர் இருக்கே'' கிட்டத்தட்ட கண்கள் வெளி வந்திடும் ே ாலிருந்தது. பயப்பிடாதேங்கோ அக்கா... இப்ப மழைகாலம்......ப ங் கருக்கை தண்ணி இடிஞ்சுபோச்சு என்ற சுரேஸ் அருகிலிருந்த அந்த மரத்தைக்காட்டினான்.

சுப்பர்சொனிக்குகள்நாலாம் தடவையாய்இருக்கவேணும் .. திடீரென ஒன்று கொஞ்சம்சுத்திப் பதிந்து மிகை ஒலியை மேலும் கூட்டி

''அறுந்தவங்கடை சத்தமே மனிசரைக்கொல்லப்போகுது' சுவருக்கும் அந்த பொன்னொச்சிமரத்திற்குமிடையில் நின்ற அக்கா,கால்கள்வெடவெடக்க அப்பிடியே சுவரோட அண்டிப் போய் கூனிக்குறுகி அழுகின்ற தொனியில் கத்திக்கொண்டிருந்தா .. வானத்தையேபார்த்த படிநின்றமுகுந்தன்ஈவிரக்கமில்லாமல் பெரிய பெரிய யுத்தத்தில பாவிக்கிற இதுகளை அதுவும் இரண்டு நாடுகளின்ரை சண்டையிலை பாவிக்கிறதுகளை கொண்டுவந்து எங்களில......அங்கைபார் அந்தா அந்த அக்காவை'' எரிச்சலோடு புறுபுத்தபடி வானத்தில் அவற்றை நோட்டமிட்டுக் கொண்டிருந்தான்.

திடீரென ஜன்னலெல்லாம் அதிர்ந்தது போலிருக்கவே நிமிர்ந்து பார்த்தான் அக்கா ஒடுங்கிப்போய் தொம்மெண்டுவிழுந்து குப்புறப்படுப்பது -கண்ணில் தெரிந்தது.பக்கத்து வீட்டு ரமேஸ்- 12வயதுதான்- கத்துவது கேட்குது...அம்மா குத்துறான்அந்தா,...அந்தா'' குண்டு போடேல்ல; சும்மா ஆட்களை வெருட்டுறான்'' என்றபடி தாயின் கரைச்சல் தாங்காது பங்கருக்குள் குதிப்பது பிஞ்ச அந்த கிடுகு வேலிக்குள்ளாலை தெரிந்தது

''படுடாப்பா! விழுந்து படு மச்சான்'' என்றபடி கருணாவும் முகுந்தனும் நிலத்தில் குப்புறப் படுத்தனர். சுரேஸ் காதுகளை பொத்தியபடி அந்தப் பெரிய நெல்லிக்கைநிண்டு அக்காவைப் பார்த்தான் அவ முகம் சிவந்தது, வேர்த்து மூச்சடங்கி விட்டதைப்போல நிர்ச்சலனமாய் படுத்திருப்பது தெரிந்தது. பயம், சாவின் பயம் எவ்வளவு கொடூரமாய் ...இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி அணு அணுவாய் சாகிறது என்ன சித்திரவதையிது. நாளாந்தம் செத்து செத்து... இதைவிட ...... அவனுக்கு பாரதியின்ரை நினைவு தான் அந்தநேரம் வந்தது. அண்டைக்கு அவளை காயத்தோடை தூக்கி ஸ்ரெச்சரில வைச்சு தள்ளிக்கொண்டு போனதை யோசித்தான் சுரேஸ்.

''அக்கா உது உந்தக்காயம் எப்படி வந்தது? சுரேஸ், ''நான் அடிபட்டுக் கொண்டு தான் இருந்தனான். ஆனால் நல்ல பெரிய மரம் ஒண்டை கவராய் வைத்திருந்தேன். திடீரென சுப்பர் சொனிக்காரன் போட்ட மூந்நூறு கிலோ குண்டொன்று எனக்கு அங்காலை நிண்ட பிள்ளையளின்ரை பொயின்ரில விழுந்திட்டுது. அவங்களுக்கு உதவ ஓடிப்போனன். போனவன் திரும்பவும் கொஞ்சம் தள்ளிப் போடேக்கை ஒரு துண்டு பட்டிட்டுது: சாதாரணமாய் அந்த மணலாற்றுச் சண்டையைப்பற்றி சொல்லிக் கொண்டிருந்தாள் பாரதி.

படிப்படியாய் சத்தம் குறைவது போலிருக்கவே சிந்தனையிலிருந்து விலகி வானத்தைப் பார்த்தான் சுரேஸ். இரண்டு புள்ளிகள், புள்ளிகளுமற்று .. அந்த அக்கா எழும்பாமலே ''அண்ணைபோட்டாங்களே'' ஓமக்கா எழும்பி வாங்கோ என்றபடி அவன் சைக்கிளை எடுத்துக்கொண்டே நேரத்தை பார்த்தான்.

★ ★ ★

மண்ணைத்தட்டியபடி வந்த கருணாவும் முகுந்தனும் அவனிடம்சுரேஸ்'ராத்திரிசொல்ல மறந்திட்டம் வர்த்த மானியில கிளார்க் வேலைக்கு கேட்டிருக்கு இண்டைக்குதான் குளோசிங் டேற் மறந்திடாதை என்றபடி அறைக்குட் சென்றனர்'' சுரேஸ் சிரித்தபடியே ''ஓமோம் தெரியும்'' என்றபடி சைக்கிளை மிதித்தான். அந்தப் புலிமைச்சிலந்தி அப்பாவியாய் .. சுவரில ஒட்டின படி ..திரும்ப திரும்ப அவனுக்கு அதே நினைவுதான் எவ்வளவு பாவம் அது.

---

## உலகில் பெரியவை

- ★ உலகில் மிகப் பெரிய வங்கி — அமெரிக்க வங்கி
- ★ உலகில் மிகப்பெரிய பறவை — ஒஸ்ரிச்
- ★ உலகில் மிகப்பெரிய கடற்பறவை — அல்பட்ரஸ்
- ★ உலகில் மிகப் பெரிய மீனினம் — ஹலிபட்
- ★ உலகில் மிகப் பெரிய எரிமலை —முலைவாக்கே
- ★ உலகில் மிகப் பெரிய நூதனசாலை — பிரிட்டிஷ்
- ★ உலகின் மிகப்பெரிய கடல் — ஐப்பானியக்கடல்

தொகுப்பு
சசி

## பறவைகள் பலவிதம்

- ★ இறக்கை இல்லாத பறவை — கிவி
- ★ அதிக நீரருந்தும் பறவை — புறா
- ★ மிகப் பெரிய முட்டையிடும் பறவை — தீக்கோழி
- ★ மிக வேகமாக பறக்கும் பறவை — சுவிப்ட் (மணிக்கு 200 மைல்)
- ★ நீண்ட காலம் வாழும் பறவை — ஒஸ்ரிச்
- ★ பின் புறமாகப் பறக்கும் பறவை — ஹம்மிங்பேர்ட் (இசைக்கும் பறவை)

தொகுப்பு
பார்த்தி

## உறவுகளின் இராகங்கள்

எதிலும் குற்றம் காணும் சூழலில் வாழ்பவன்
கண்டனம் செய்யப் பினவாங்க மாட்டான்
என்றும் ஏக்கம் நிறைந்த சூழலில் வாழ்பவன்
ஆக்கத்திற்கு அஞ்சுவான்
ஏமாளிகள் கூட்டத்தில் வாழ்பவன்
எதிர் நீச்சலாடத் தயங்குவான்
ஏளனத்திற்கு அடிக்கடி ஆளாகுபவன்
வெட்கத்தில் வளருவான்
அவனை அவனாக ஏற்றுக் கொள்ளும் மனிதனோடு
வாழ்பவன்
அன்பு செய்வதில் தேர்ச்சி பெறுவான்
தைரியமூட்டும் சூழலில் சுழல்பவன்
நம்பிக்கையின் அணிகலனாக திகழ்வான்.

## புலியும் காளையும்

தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறையினர் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில், ஒரு அரிய நினைவுக் கல்லை கண்டெடுத்துள்ளனர். குடியாத்தம் அருகேயுள்ள செம்பள்ளி கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட இந்த நினைவுக் கல்லில் ஒரு காளையின் உருவமும், ஒரு புலியின் உருவமும் பொறிக்கப்பட்டிருப்பதுடன் புலியும் காளையும் போரிடும் காட்சியும் இந்நினைவுக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது.

அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடக சபாவின்

# மாபெரும் நாடகக் கலை விழா



இடம்:

**அரியாலை ஸ்ரீ கலைமகள் விளையாட்டு மைதானம்**

காலம் :

**22-10-1993 வெள்ளி (இன்று) இரவு 7.30 மணிக்கு**

இந்தமண் எங்களின் சொந்தமண் புகழ்
சாந்தன் அரிச்சந்திரனாகவும்
நடிககலாமணி V.செல்வம் சந்திரமதியாகவும்
இராமண்ணா சத்தியகீர்த்தியாகவும்
இணைந்து வழங்கும்
சோக சோபித சொர்ண கவிக்குயில்
V·K. இரத்தினத்தின் நெறியாள்கையில்

## "அரிச்சந்திர மயான காண்டம்" புராண நாடகம்

ஆர்மோனியம்: பிலிப்புயோன் கபாஸ் மிருதங்கம்: மி. வரதன்

அன்பளிப்பு:

இன்றைய அறிமுகம் நாளையநாகரிகம்

முகூர்த்த பட்டுப்புடைவைகளைஉங்கள் விருப்பத்திற்கு தெரிவுசெய்ய ஒரே ஸ்தாபனம்

## சோபனா ஆடை அகம்

16,பெரியகடைவீதி, யாழ்ப்பாணம்

(4050)

அன்பளிப்பு:

புதுப்புது டிசைன்களில் தங்கநகைகளை உற்பத்தி செய்பவர்கள்

ஓடர் நகைகளை குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள

## "துர்க்கா ஆபரண மாளிகை"

71,கன்னாதிட்டி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

## கண்ணீரை செந்நீராக்கி

# அஞ்சலிக்கின்றோம்




எங்களின் கிட்டண்ணாவே!
உடன் வந்த வேங்கைகளே!
நீங்கள் வந்த கப்பல்
எரிந்ததால் எழுந்த பெருந் தீ
வங்கக் கடலில் கலங்கரை விளக்க
மென
எழுந்து நிற்கும்!
தங்கத் தமிழீழ விடுதலைக்காய்
தரணிக்கு வழிகாட்டும்!

கொடிகாமம் வர்த்தகர் சங்கம்

(சி-5847)

எமது கல்லூரியின் பழைய மாணவன்



# கேணல் கிட்டு
## (சதாசிவம் கிருஷ்ணகுமார்)

அவர்களின் தற்கொடை கேட்டு

## கண்ணீர் சிந்துகிறோம்

பட்டுநிலா எம்மை விட்டு பறந்து போனதோ
பாவிகளின் சதிவலைக்குள் வீழ்ந்து போனதோ
கட்டு உடல் கடலோடு கரைந்து போனதோ
கலங்கியமும் ஈழமக்கள் எப்போ காண்பதோ

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய
ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள். (4121)

## நிவாரண விநியோகத்திற்கு கையிருப்பு போதாது

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் இடம் பெயர்ந்த அகதிகளுக்கான இம்மாதத்திற்குரிய இலவச நிவாரணப் பொருள்களை வழங்குவதற்கு யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி கொழும்பில் இருந்து உணவுப்பொருள்களுடன் வருகின்ற கப்பலை எதிர்பார்த்து காத்திருக்கின்றது என தெரிய வருகின்றது.

யாழ் செயலக புனர்வாழ்வுப்பகுதியில் போதிய அளவு உணவுப் பொருள்கள் கையிருப்பில் இல்லாமையினாலேயே அவர்கள் யாழ் குடாநாட்டிற்குத் தேவையான ஒரு தொகுதி அத்தியாவசிய உணவு மற்றும் பொருள்களுடன் வருகின்ற ''குமாரி'' கப்பலை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். இக்கப்பலில் உணவுப் பொருள்கள் வந்தவுடன் உடனடியாக இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரண விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிய வருகின்றது.

மேலும் இவ்வருடம் ஆரம்பித்து இன்று வரை தங்களுக்கு நிவாரணப் பொருள்கள் எதுவும் கிடைக்காததையிட்டு மேற்படி இடம் பெயர்ந்த அகதிகள் மிகுந்த பட்டினி நிலைக்கு தள்ளப்பட்டதுடன் தங்களுக்கான இலவச நிவாரணத்தை இவ்வருடம் தொடக்கம் அரசு நிறுத்திவிட்டதோ என அங்கலாய்க்கும் நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். (பா)

## கிருமிநாசினி தெளிப்பு

இடம் பெயர்ந்து, கெற்பலி பண்டிதர் குடியிருப்பு, நாவற்குழி லவனிதா குடியிருப்பு முகாம்களில் தங்கியுள்ளவர்களினால் மேற்கொள்ளப் பட்டிருக்கும் வீட்டுத்தோட்டப் பயிர்களில் இலைச்சுருட்டு நோய் காணப்பட்டதைத் தொடர்ந்து, தீவக பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினர், இப்பயிர்களைப் பாதுகாக்கும் பொருட்டு கிருமி நாசினிகளை தெளித்து வருகின்றனர்.


பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம், பளை.

## பொது முகாமையாளர் பதவி வெற்றிடம்

மேற்படி பதவிவெற்றிடம் சம்பந்தமாக 16-1-93இல் ஈழநாதம் உதயன், இதழ்களில் வெளிவந்த விளம்பரத்தில் உள்ள விண்ணப்ப முடிவு திகதி 15 2-93 வரை நீடிக்கப்பட்டுள்ளதுடன் தகைமைகள் பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை ''தலைவர், பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ சங்கம் பளை'' என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

குறியீட்டு இல: 101/7 சம்பளத்திட்டம் (9) 1105 60x4 - 75x11 - 2170 அத்துடன் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சகல படிகளும்.

வயது 25 — 45 (கூட்டுறவுப் பணியாளர்களுக்கும் அரச ஊழியர்களுக்கும் இவ்வயதெல்லை பொருந்தாது)

### தகைமைகள்

1) கூட்டுறவுப் பணியாளரின் 8-வது சம்பளத் திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 3 வருடத்திற்குக் குறையாத அநுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளர் 9-வது சம்பளத் திட்டத்தில் மேற்குறித்த வண்ணம் 6 வருடத்திற்குக் குறையாத அநுபவம் அல்லது
2) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன் வர்த்தக / தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றின் முகாமை மட்டத்திலான பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அநுபவம் அல்லது
3) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரமும் (உயர்தரம்) க. பொ. த. (உயர்தரம்) இல் 3 பாடங்களில் சித்தியுடன் வர்த்தக / தொழில் நுட்ப ஸ்தாபனமொன்றின் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அநுபவம்.

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம்,
பளை.
22-01-93 (4119)

செ. மார்க்கண்டு
தலைவர்.


முழு மலரே நீ மறைந்து
## 31 ஆம் நாள் ஆனதுவோ?

| தாயின் மடியில் | | நோயின் பிடியில் |
|---|---|---|
| 02 — 02 — 1977 |  | 23 — 12 — 1992 |

## செல்வி காந்தரூபி மகேந்திரன்

[நந்தினி] ஆண்டு - 11 நவாலி மகாவித்தியாலய மாணவி

மாதம் ஒன்று போனது - எம்
மனம் அலைபோல் வேகுது
காலம் செய்த கோலத்தால் - எம்
கண்கள் ஒளியின்றித் தவிக்குது

நீ வாழ்ந்த நாட்கள் கொஞ்சம்
நாம் வாடும் நாட்கள் இதை விஞ்சும்
களங்கமற்ற நெஞ்சம் இருந்தும்
கலக்கம் தான் கண்ட மிச்சம்!

நவாலி அரசடி,
மானிப்பாய்.
(சி/5849)

உன் பிரிவால் கதறும்
அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள்,
மற்றும் உற்றார், உறவினர்கள்.

# சகலகலாவல்லவன்; சாதனை வீரன்
# தளபதி கிட்டு பற்றி ஒரு கண்ணோட்டம்

வெ. இளங்குமரன்

1979 ஆம் ஆண்டு தொடக்கத்தில் கிட்டு தன்னை இயக்கத்தில் இணைத்துக் கொண்டபோது இயக்கத்தில் சில பத்து உறுப்பினர்கள்தான் இருந்தனர். சதாசிவம் கிருஷ்ணகுமாராக இயக்கத்தில் இணைந்தவனுக்குத் தொடக்கத்தில் வெங்கிட்டு எனப் பெயர் சூட்டப்பட்டது. ஆயினும் கிட்டு என்றே இயக்கத் தோழர்கள் அழைத்ததால் கிட்டு என்ற பெயரே அவனுக்கு நிலைத்து விட்டது. துடிப்பு மிக்க இளைஞனான கிட்டு, இயக்கத்தில் தலைவர் பிரபாகரன் அவர்களிடம் நேரடியாக ஆயுதப்பயிற்சி பெற்ற வீரர்களில் ஒருவன். அது மட்டுமன்றி இயக்கத்தின் ஒழுங்கு கட்டுப்பாடுகள் பற்றி, இயக்க வீரர்கள் செயற்படுவது எப்படி என்பது பற்றி, அரசியல் பற்றி, மக்களோடு பழகுவது பற்றி, உலக விடுதலை இயக்கங்கள், விடுதலைப் போராட்டங்கள் பற்றி எல்லாம் தலைவரின் அறிவுரைகள், எண்ணங்களை நிறையப் பெறும் வாய்ப்பையும் கிட்டு பெற்றிருந்தான்.

எதையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற பேரார்வம், சொல்பவற்றை எளிதில் உடனடியாகப் புரிந்து கொள்ளும் தன்மை, அச்சம் சிறிதுமற்ற தன்மை, எடுத்த செயலை நிறைவாக முடிக்கும் தன்மை போன்ற அவனிடம் இயல்பாகவே இருந்த இயக்கவீரனொருவனுக்கு வேண்டிய திறமைகளை தலைவர் பிரபாகரன் அவர்கள் நன்கு அறிந்து கொண்டார்.

தலைவர் பிரபாகரன் மீது பெருமதிப்பும் பேரன்பும், இயக்கத்தின் கொள்கை செயற்பாடுகளில் நிறைவான தெளிவும் பெற்றிருந்த 19 வயது இளைஞனான கிட்டுவிடம், துடிப்பான இளைஞர்களிடம் இயல்பாகவே இருக்கும் குறும்புத்தனமும் இருந்தது. 1979 இல் தலைவர் பரபாகரன் அவர்கள் இயக்கப்பணியின் பொருட்டு தமிழகம் சென்றிருந்த வேளையில் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினராக இருந்த கணேசனால் (ஐயரால்) இயக்க உறுப்பினர் ஒருவனுக்கு அடித்து விட்டான் என்பதற்காகக் கிட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்டான்.

தமிழகத்திலிருந்து திரும்பி வந்த தலைவர் பிரபாகரன் அவர்கள் கிட்டுவின் ஆற்றல்கள், திறமைகள், இயல்புகளை நன்றாகத் தெரிந்து வைத்திருந்ததால் உடனடியாகக் கிட்டுவை அழைத்து மீண்டும் இயக்கத்தில் இணைத்துக் கொண்டார்.

தலைவர் அவர்கள் கிட்டுவின் மீது வைத்திருந்த நம்பிக்கைகள் வீண்போகவில்லை 1981 நீர்வேலி வங்கிக் கொள்ளை தொடர்பாகப் பொலிசாரால் தேடப்பட்டு, தலைமறைவாகித் தமிழகம் சென்று 82 இல் திரும்பிய கிட்டு 1983 மார்ச் 4 ஆம் நாள் அற்புதன் தலைமையில் இயக்கம் மேற்கொண்ட உமையாள்புரம் தாக்குதலின்போது தன் தனி ஆற்றலைக் காண்பித்து தலைவரினதும், இயக்க வீரர்களினதும் பெருமதிப்பைப் பெற்றான்.

அதையடுத்து 1983 ஏப்ரல் 7ஆம் நாள் கிட்டு இயக்கத்தின் தாக்குதல் குழுவின் இரண்டாவது பொறுப்பாளராக தலைவர் பிரபாகரன் அவர்களால் அமர்த்தப்பட்டான்.

அதன்பின் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல் பகிஷ்கரிப்பின்போது கந்தர்மடம் வாக்குச் சாவடியில் இராணுவத்தினருடன் நடைபெற்ற மாதல், ஜூலை 23ல் திருநெல்வேலியில் இராணுவ வண்டிகள் மீதான தாக்குதல் போன்றவற்றில் கிட்டு தன் தனி ஆற்றலைக் காட்டினான்

1983 பிற்பகுதியில் இந்திய அரசு வழங்கிய பயிற்சி பெறச் சென்ற இயக்கத்தின் முதற்குழுவுக்கு இரண்டாவது பொறுப்பாளராக தலைவர் பிரபாகரன் அவர்களால் அமர்த்தப்பட்டான். அந்தப் பயிற்சியின் போது ஆயுதங்களைக் கையாள்வதில் கிட்டு காட்டிய துரிதமும் திறமையும் இந்திய பயிற்சியாளர்களை வியக்கவைத்தது.

பயிற்சியை முடித்து தமிழீழம் வந்த கிட்டு 24 - 2 - 84 அன்று யாழ். குருநகர் இராணுவ முகாமின் கட்டடங்களைத் தகர்த்ததுடன், இயக்கம் மேற்கொண்ட பல்வேறு தாக்குதல்களில் தன் திறமையையும், வீரத்தையும் காண்பித்தான். 1985இல் கப்டன் பண்டிதர் வீரச்சாவடைந்ததைத் தொடர்ந்து யாழ். மாவட்டத் தளபதியாகிய கிட்டு வடமாகாணத்திலேயே பெரிய பொலிஸ் நிலையமாகத்திகழ்ந்த யாழ். பொலிஸ் நிலையக் கட்டடங்களைத் தகர்த்து நூற்றுக்கணக்கான ஆயுதங்களையும் ஆயிரக்கணக்கான ரவைகளையும் பல ஆவணங்களையும் கோப்புகளையும் கைப்பற்றி பொலிசாரை விரட்டியடித்தான்,

அதன்பின் தளபதி கிட்டு இராணுவ முகாம்களை முற்றுகையிட்டு இடைவிடாது படிப்படியாக மேற்கொண்ட தாக்குதல்களினால் சிங்களப் படை முற்றாக முகாம்களுக்குள் முடக்கப்பட்டு யாழ்ப்பாணம் விடுதலைப்புலிகளின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது தளபதி கிட்டுவின் ஆற்றல், திறமை, உழைப்பு எதற்கும் அஞ்சாத வீரம் என்பனவே - இன்று போலன்றி - ஆள்வலு, ஆயுத வலு போன்ற வசதிகள் குன்றியிருந்த காலத்திலும் கூட அவன் பெரு வெற்றிகளைக் குவிக்கக் காரணமாக அமைந்தது. அக்காலத்தில் எதிரிகளினது பயங்கரவாதச் செயல்களை மட்டுமன்றி இனத் துரோகிகளின் சதிச்செயல்களையும் சமூகவிரோதிகளின் அடாவடித்தனங்கள் போன்றவற்றையும் எதிர்கொண்டு ஈடுகொடுத்தான். தளபதி கிட்டு தன் அருஞ்சாதனைகளையும் படைத்தான்.

தளபதி கிட்டு தனது ஆற்றலையும் திறமையையும்இராணுவ நடவடிக்கைகளோடு நிறுத்திக் கொள்ளவில்லை. குடாநாட்டில் சிங்களக் காவல் துறை முற்றாகச் சீர்குலைக்கப்பட்டதையடுத்து யாரும் கேட்பாரற்ற முறையில் பெருகிய சமூகவிரோதச் செயல்களையும் சட்டமீறல்களையும் தடுத்து நிறுத்த கிராமிய நீதிமன்றங்களை ஏற்படுத்தினான் சமூக ஒழுக்கமீறல்கள் பண்பாட்டுப் பிறழ்வுகளுக்கெதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டான் சிறிலங்கா அரசின் இராணுவம் முகாம்களுக்குள் முடக்கப்பட்டு யாழ். குடாநாடு விடுதலைப்புலிகளின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் வந்ததைத் தொடர்ந்து சிறிலங்கா அரசு பொருளாதாரத்தடையை மேற்கொண்டதையடுத்து தளபதி கிட்டு கிராமிய உற்பத்திக் குழுக்களைஅமைத்து உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்தான். இயக்கத்தினூடாகவும் சவர்க்காரத் தொழிற்சாலைகள், தும்புத் தொழிற்சாலைகள் போன்ற பல்வேறு தொழிற்சாலைகளையும் விவசாயம், கோழி, கால்நடைப் பண்ணைகளையும், விற்பனைநிலையங்களையும். நியாயவிலைக் கடைகளையும் ஏற்படுத்தினான்

போராட்ட சூழ்நிலையில் சிறுவர்கள் குழந்தைகளின்மன நிலை பாதிப்புறா வண்ணம் சிறுவர்களின் பொழுது போக்குக்காக பலசிறுவர் பூங்காக்களை உருவாக்கினான்.மக்கள் மனதில் விடுதலை உணர்வை விதைப்பதற்காக வில்லுப் பாட்டு, தெருக்கூத்து, நாடகம் என பல கலை நிகழ்ச்சிகளை ஊக்குவித்தான். நிதர்சனம் தொலைக்காட்சிநிலையத்தின் மூலம் போராட்ட முனைக்கு நேரடியாக மக்களை அழைத்துச் சென்றான். சிறுவர்க்கான கலைநிகழ்ச்சிகள் கார்ட்டூன்கள் போன்றவற்றையும் ஒளிபரப்பவைத்தான்.

இயக்க நடவடிக்கைகள் அனைத்திலும் வெற்றிகள் குவிக்கப்பட்டவேளையில் விடுதலைப் புலிகளிடம் பிடிபட்டிருந்த சிங்கள இராணுவ வீரர்களை விடுவிக்க என பேச்சு வார்த்தை நடத்தவந்த சிங்கள அரசியல் தலைவர்களோடும், பௌத்த பிக்குகளோடும் உரையாடி பேச்சு வார்த்தை நடத்தி விடுதலைப் புலிகளின் நடவடிக்கையின் நியாயத்தை அவர்களுக்கு உணர்த்தி அனுப்பினான்.



1986 ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம்நாள் விடுதலைப் புலிகளிடம் பிடிபட்டிருந்த சிங்கள இராணுவத்தினர் இருவரைப் பார்ப்பதற்கும் அவர்களை விடுவிப்பது தொடர்பாகபேசுவதற்கும் என கொழும்பிலிருந்து வந்த கேணல் ஆனந்தவீரசேகரா, யாழ் கோட்டை முகாம் பொறுப்பதிகாரி கப்டன் சொத்தலாவலை ஆகியோரை வரவழைத்து தனது இடத்தில் வைத்துச் சந்தித்து உரையாடி விடுதலைப் புலிகளின் நிலையை எடுத்துக்கூறி சிங்கள இராணுவ உயரதிகாரிகளுக்கு தான் சளைத்தவன் அல்லன் என்பதை மெய்ப்பித்தான்.

1986 நவம்பரில் தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழ் நாட்டில் இந்திய அரசுக்குஎதிராக சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்ட போது இந்திய நயவஞ்சகச் செயலுக்கு எதிராக தமிழீழ மக்களை அணிதிரட்டி மிகப்பெரிய கண்டன ஊர்வலத்தையும் கண்டனப் பொதுக் கூட்டத்தையும் வரலாறு காணாத வகையில் எழுச்சியுடன் நடத்திக் காட்டினான்.

இனத் துரோகிகளினதும், சமூகவிரோதிகளினதும் அடாவடித்தனங்களைஅடக்குவதில் கிட்டு முனைப்பாகநின்றதால் பல இடர்களை தளபதி கிட்டு எதிர்நோக்கவேண்டியிருந்தது. 1987 மார்ச் 23ஆம்நாள் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த யாழ். தொலை தொடர்பு நிலையமுகாம்மீதுதாக்கு தலை வெற்றிகரமாக நடத்தி ஒரு வாரத்தில் சமூகவிரோதக்கும்பல் மறைந்திருந்து மேற்கொண்ட குண்டுவீச்சில் தளபதி கிட்டுதனதுஇடதுகாலைஇழந்தான். முகாம்களுக்குள் முடக்கப்படுவதற்கு முன்பும் முடக்கப்பட்ட பின்பும்அரச படைகள் முகாம்களுக்குள் இருந்தபடி மேற்கொண்ட ஷெல் தாக்குதல்களாலும் விமானக் குண்டு வீச்சாலும் வீடுகள், வியாபார நிலையங்கள்பாதிக்கப்பட்டவேளைகளிலெல்லாம் தளபதி கிட்டுஅந்த இடத்துக்கு விரைந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவத் தவறுவதில்லை. அரசபடைகளின் பயங்கரவாதங்களிலிருந்துமக்களைக்காத்த தளபதி கிட்டுவின்மீது மக்கள் தமது அன்பையும் பாசத்தையும் பொழிந்தனர்.

விமானக் குண்டுவீச்சுக்களையும் ஹெலிகொப்டரின் துப்பாக்கிச் சூட்டையும் பொருட்படுத்தாது 1987 ஆம் ஆண்டு மே நாளில் நடைபெற்ற விடுதலைப்புலிகளின் ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலும் காலிழந்த தளபதி கிட்டுவை முதற்தடவையாகப் பார்த்து விட வேண்டும் என்னும்துடிப்பில் சிறுவர், பெண்கள், முதியோர், இளைஞர் என்ற வேறுபாடின்றி லட்சக்கணக்கில் அணிதிரண்ட மக்கள் வெள்ளம் வெளிப்படுத்திய ஆவலும் துடிப்பும், மக்கள் தளபதி கிட்டுவின்மீது எத்தகைய ஆழமான மதிப்பை, அன்பை, பாசத்தை வைத்திருந்தனர். என்பதை எடுத்து விளக்குவதாக இருந்தது.

தளபதி கிட்டுவின் கைகளில் ஆயுதங்கள் மட்டுமன்றி எழுதுகோலும் திறமையாகவே கையாளப்பட்டது. தமிழ்மக்களை படுகொலை செய்தும் மக்கள் சொத்துக்களைச் சூறையாடியும், அழித்தும் வந்த சிங்கள இராணுவத்தினரை முகாம்களுக்குள் முடங்கவைத்து மக்களையும் அவர்களது உடைமைகளையும் பாதுகாத்த வேளையில் எதிரிகளினதும் இனத்துரோகக் கும்பல்களினதும், அவதூறுகள் பழிகளை நீக்கி உண்மையை மக்களுக்கு எடுத்துரைக்கும்வகையில்''களத்தில்'' என்ற இயக்க செய்திஇதழைத் தொடங்கிய தளபதி கிட்டு அதிலும் தன்தனிஈடுபாட்டை மேற்கொண்டான். பொதுக் கூட்டங்கள் கருத்தரங்குகளைஒழுங்கு செய்துமக்களை அடிக்கடி நேரடியாகச் சந்தித்தான்.

தனது காலுக்கு சிகிச்சை பெற தமிழ்நாடு சென்ற தளபதி கிட்டு தமிழ் மக்கள் மீது இலங்கை - இந்திய ஒப்பந்தம் திணிக்கப்பட்டு இந்தியப்படை விடுதலைப்புலிகள் போர் தொடங்கியதையடுத்து இந்திய அரசினால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டான். வீட்டுக்காவலில்இருந்த காலத்தில் விடுதலைப்புலிகளின் தலைமைக்கும் இந்திய அரசுக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளுக்கு தொடர்பாளனாகச் செயல்படும் நிலை தளபதி கிட்டுவுக்கு ஏற்பட்டது.

தளபதி கிட்டு இந்திய அரசின் பிடியில் இருந்தவேளையிலும் இந்திய உளவுத்துறையினர் காவல்துறையினர் விடுதலைப் புலிகள்இயக்கத்தினதும் தமிழீழ மக்களினதும் நலன்களுக்கு எதிரான வகையில் திட்டங்கள் எண்ணங்களை முன்வைத்தவேளைகளில் அவற்றை கடுமையாக எதிர்த்தான். இந்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இந்திய தொலைக்காட்சிக்கு சமாதான முயற்சி தொடர்பாக பேட்டியளிக்கும்படி இந்திய உளவுத்துறையினர் தொலைக்காட்சிநிலையச் செய்தியாளர்களை அழைத்து வந்தபோது அமைதி முயற்சி பற்றி இயக்கம்கொண்டிருந்த நிலைக்கு மாறாக பேட்டி கொடுக்க முடியாது என எதுவிததயக்கமுமின்றிஅவர்களை திருப்பியனுப்பினான் தளபதி கிட்டு.

தளபதி கிட்டு தமிழகத்திலிருந்த நாட்களில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களை, அரசியல் தலைவர்களை, கலைஞர்களை தமிழறிஞர்களை, பேராசிரியர்களை, பத்திரிகையாளர்களை எல்லாம் அடிக்கடி அழைத்துப் பேசி தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தேவையையும் நியாயத்தையும் எடுத்து விளக்கி அவர்களின் ஆதரவையும், உதவிகளையும் பெற்றான்.

தளபதி கிட்டு தமிழகத்தில் வீட்டுக்காவலில் இருந்தபோது காவல் கடமையில் இருக்கும், தன்னைச் சந்திக்கவரும் பொலிசாரிடம் தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றி எடுத்துரைக்கத் தவறுவதில்லை.

தளபதி கிட்டு தமிழகத்தில் இருந்த காலத்தில் 'தமிழீழம்' என்ற இயக்கத்தின் மாதஇதழ் ஒன்றைத் தொடங்கி அதற்கான பல ஆக்கங்களையும் தானே எழுதி. கைதாகி சென்னை மத்திய சிறையில் அடைக்கப்படும்வரை ஏழு இதழ்களை வெளியிட்டான் ஏழாவது இதழின் ஐயாயிரம் படிகள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டன.

கைதாகி சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்ட வேளையில் கூட தளபதி கிட்டு உள்ளிருந்தபடியே வெளியே தலைமறைவாகியிருந்து செயற்பட்ட இயக்க வீரர்களுக்கு உரிய வேலைகளை வழங்கி அவர்களிடமிருந்து அறிக்கைகளையும் பெற்று ஆராயத் தவறவில்லை.

சிறையிலிருந்தபடியே அன்று இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ்காந்திக்கு தளபதிகிட்டு கடிதம் எழுதினான். தளபதி கிட்டு சிறையில்இருந்தவேளையில் தான் தமிழகத்திலிருந்து வெளிவரும்தேவி வார இதழில் தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான தளபதி கிட்டுவின் நீண்ட கட்டுரைத் தொடர் வெளிவந்தது.

சிறையிலிருந்த வேளையில் தன்னை விடுவிக்குமாறும் அன்றேல் தமிழீழத்திலுள்ள விடுதலைப்புலிகளிடம் தன்னைச்

(2 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியா

வியூகத்திற்கு அப்பால் ஐரோப்பிய நாடுகளின் தலையீடு இப்பிராந்தியத்தினுள் ஏற்பட்டுவிடக்கூடாது. ஐரோப்பிய நாடுகள் இங்கு தலையிட்டால் தனது செல்வாக்கும், ஆதிக்கமும் குறைந்து விடும் எனவும் இந்தியா அஞ்சுகிறது. எனவே இதை தடுக்க வேண்டும், இடை நிறுத்த வேண்டும், இந்நிலையில்தான் கிட்டு ஏன் வருகின்றார்? எப்படி வருகின்றார்? எதற்காக வருகின்றார்? என்பதெல்லாம் ஏற்கனவே தெரிந்தும் இந்தியக்கரையிலிருந்து நானூற்று ஐம்பது மைல்களுக்கு அப்பால் நிக்கோபர் தீவுகளுக்கு அப்பால் வைத்து எங்களது கப்பலை இநதியா இடைமறித்தது இடைமறிக்கப் பட்டதும் நாம் இந்த விடயத்தை உடனடியாக சர்வதேச உலகுக்கும் அறிவித்தோம். இரண்டு நாள் கப்பல் பயணம் நடந்தது. இந்த இரண்டு நாளும் அந்தக் கப்பலில் நடைபெற்ற விடயங்கள் எங்களது சர்வதேச செயலகம் மூலம் உலக நாடுகளுக்கு அறிவிக்கப்பட்டது. உலக மனித உரிமை ஸ்தாபனங்களுக்கு அறிவிக்கப்பட்டது. உடனடியாக இந்தியாவின் இந்தத் தலையீட்டை நிறுத்துங்கள் தளபதி கிட்டுவைக் காப்பாற்றுங்கள் என்று எத்தனையோ நாடுகளிடம் மன்றாட்டமாக கேட்டோம்.

ஆனால் இந்தியாவிற்கு அழுத்தம் போடுவதன் மூலம் இந்தியாவை ராஜதந்திர ரீதியாகப் பகைத்துக்கொள்ள பிரிட்டன் போன்ற நாடுகள் விரும்பவில்லை. பெரிய அளவில் பிரிட்டன் போன்ற நாடுகள் தலையிட்டு இந்தியா மீது அழுத்தம் போட்டிருக்குமானால் தளபதி கிட்டு காப்பாற்றப்பட்டிருப்பார். ஆனால் இந்த மேற்கு நாடுகள் அப்படிப்பட்ட முயற்சி எதையும் மேற்கொள்ளவில்லை.

இந்தியக் கடற்படையின் இந்த நடவடிக்கை குறித்து இந்திய அரசு மட்டத்தில்- வெளியுறவு அமைச்சு மட்டத்தில் - பாதுகாப்பு அமைச்சு மட்டத்தில் -பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. என்ன செய்வது என்பது தெரியாமல் இந்தியா இரண்டு நாளாக மௌனமாக இருந்தது. இதற்குள் இந்தியக்கடற்படை எமது தளபதிகளை கப்பலை விட்டிறங்குமாறு ஆயுதமுனையில் அச்சுறுத்தியது வேறு வழியில்லை. இரண்டு பெரிய நாசகாரக்கப்பல்களை அருகில் வைத்துக் கொண்டு பீரங்கிகளை நீட்டிக் கொண்டு சரணடையுங்கள்என்றுகேட்டது. இந்திய அரசிடம் சரணடைந்தால் என்ன நடக்கும் என்பது உங்களுக்குத் தெரியும். ஏற்கனவே எமது போராளிகள் பலர் கண் இல்லாதவர்கள், முழு உடலும் இயங்காதவர்கள், வலது குறைந்த அங்கவீனர்கள், இவர்களை எல்லாம் சிறையில் போட்டு சித்திரவதை புரியும் இந்திய அரசு கிட்டுவைக் கைப்பற்றியிருந்தால் - அவர் அசிங்கப் படுத்தப்பட்டிருப்பார். கொடூரமான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பார். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சம்பந்தப் படுத்தப்பட்டிருப்பார். வேறு பல வழிகளில் அவர் மிக மிருகத்தனமாக நடத்தப்பட்டிருப்பார். இந் நிலையில் இந்தியாவின் பயமுறுத்தலுக்கு - அச்சுறுத்தலுக்கு அடிபணியக் கூடாது என்பதால் அவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

ஆனால் இதற்குப் பின்னணியில் பல ராஜதந்திரத் தலையீடுகள் உண்டு. எமக்குக் கவலை என்னவெனில் இந்தத் தீர்வுத் திட்டத்தை முன் மொழிந்த சில நாடுகள் முக்கியமாகபிரிட்டன்போன்ற நாடுகள் - குவேக்கஸ் சமாதானக் குழுவை இங்கு அனுப்பிய நாடுகள் இதில் மௌனம் சாதித்தமையாகும். அதாவது கிட்டு பற்றிய உண்மையான விடயத்தை தெரிந்து கொண்டும் அவை இந்தியாவைப் பகைக்க விருமபாமல் மௌனம் சாதித்துள்ளன. இந்தியாவும் தனது தேசிய வல்லாதிக்க நலன் குறித்து எமது தளபதிகளை அழித்துவிட்டு நிற்கின்றது இதன் ஒட்டு மொத்த விளைவுகள் என்ன? இனியென்ன நடக்கும். உங்களுக்கு ஒன்று தெரிய வேண்டும். வெளிநாடுகள் எங்கும் ஒரு பெரிய ஆவேச அலையொன்று பரவுகிறது. எங்கள் மக்கள் மத்தியில் வெளிநாடுகளில் இருக்கும் அமைப்புகள்மத்தியில் - இந்த நெருக்கடியை இந்தியாவின் இத் துரோகச் செயலை அம்பலமாக்கும் நோக்கத்தோடு கண்டனப் பேரணிகள்- ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

தமிழ்நாட்டில் இந்தப்பிரச்சினை பற்றிய உண்மையான தகவலேதும் மக்களுக்குப் போகவில்லை. ஏதோ புலிக் கப்பல் ஒன்று தங்களது கடல் எல்லைக்கு வந்து குழம்பிப் போய் நின்றது அவர்களைப் பிடிக்கப் போனோம் அதற்கு முன்பாக அவர்களே தமது கப்பலுக்கு தீ வைத்துக் கொளுத்திவிட்டார்கள் என்பது போன்ற ஒரு பொய்ச் செய்தியை - புனைகதையை பரப்பியுள்ளார்கள். ஆனால் லண்டனிலிருந்தும், பாரிசிலிருந்தும் தொலைபேசி மூலம் சில தமிழகத் தலைவர்களுக்கு விடயத்தை சொல்லியிருந்தோம். கிட்டுவின் சமாதானப் பயணத்தை இந்தியா தடுப்பதற்கு விடக்கூடாது என்ற நெடுமாறன் போன்ற தமிழகத் தலைவர்களிடம் கேட்டிருந்தோம். ஆனால் இத்தலைவர்கள் இப்போது சிறையில் வைக்கப்பட்டு இருக்கின்றார்கள்.

இந்நிலையில் எங்களுக்கு நியாயம் வழங்க எவருமே இல்லையா? இந்த உலக சமுதாயம் இதைப் பார்த்து நிற்கிறதா? என்று நீங்கள் கேட்பீர்கள் ஒன்றை மட்டும் நான் உங்களுக்கு சொல்லலாம். அதாவது இப்படி எங்களைப் போல எத்தனையோ ஒடுக்கப்பட்ட மக்களினம் மிகவும் மிருகத்தனமாக நசுக்கப்பட்ட மக்களினம் நீதி கேட்டுப் போராடும் மக்களினம் இவர்களை எல்லாம் காப்பாற்றுவது என்ன? இவர்களுக்கு நீதி வழங்கிக் கொடுப்பது என்ன? இது இந்தப் போராட்டங்களின் தார்மீக அடிப்படையே அன்றி வேறில்லை நாங்கள் தர்மத்தின் அடிப்படையில தார்மீகத்தின் அடிப்படையில் சத்தியத்தின் அடிப்படையில் ஒரு போரை நடத்துகின்றோம். இந்த சத்தியம்தான் வரலாற்று சக்தி இந்த சத்தியம்தான் மனிதவரலாற்றை நகர்த்தும் அற்புதமான சக்தி இந்த ஆன்மீக அடிப்படையில் - தார்மீக அடிப்படையில் நடத்திச் செல்லப்படும் எமது போராட்டம் இறுதியில் வெற்றிபெறும். எத்தனை சக்திகள் இடைமறித்தாலும் இறுதி வெற்றி எமக்கே.


LONDON

கணக்கியல் வகுப்புக்கள்

I. A. B

Foundation
Inter
& Finals

ஆரம்பம் 25-01-93

- புதிய பிரிவுகள்
- இலகு விரிவுரைகள்
- சிறந்த பெறுபேறுகள்

விபரங்கட்கு NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, St. PETER'S LANE, JAFFNA.

(சி-5852)


சகல பனை, தென்னை
தொழில் வல்லுனர்களுக்குமான

## முக்கிய அறிவித்தல்

பனை, தென்னை ஆகியவற்றிலிருந்து கள், பதநீர் சீவுபவர்கள் யாவரும் அந்தந்தப்பகுதித் தெங்கு, பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களாக இருக்க வேண்டியது அவசியமானதாகும் ஆகவே நீங்கள், உங்கள் பகுதிகளிலுள்ள மேற்படி சங்கங்களோடு உடன் தொடர்பு கொண்டு உரிய முறையில் சங்கங்களின் அனுமதியைப் பெற்றுத் தொழில் புரியும் மரங்களுக்குச் சங்கங்களால் இலக்கமிட்டுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள். அனுமதியற்ற இலக்கமிடப்படாத மரங்களிலிருந்து கள், பதநீர் பெறுவது கண்டுபிடிக்கப்பட்டால் அந்தந்தச் சங்கங்களால் மரங்களின் பாளைகள் வெட்டப்பட நடவடிக்கை எடுக்கப்படும். இதைக் கவனத்திற் கொண்டு தங்களுக்கு ஏற்படக்கூடிய தொழில் நட்டங்களைத் தவிர்த்துக் கொள்ளும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

யாழ்ப்பாணப்பகுதி கொத்தணி

1. யாழ்ப்பாணம் தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்
2. அரியாலை " " " "
3. கோப்பாய் " " " "

வடமாகாண தெ. ப. பொ. உ. வி. கூ. ச. சமாசம்

(சி-5835)

## காணவில்லை

அளவெட்டி தெற்கு, அளவெட்டி செல்லையா பத்மநாதன் (அப்புமாமா), கடந்த 15 - 01 - 93 வெள்ளிக்கிழமை கடைக்குச் சென்றவரை சைக்கிளுடன் காணவில்லை. (சித்தசுவாதீனமற்றவர்) மேற்படி நபரினை கண்டோர் தகவல் அறிந்தோர் தயவுசெய்து சிவகரன் (குண்டுமணி மாஸ்ரர்) ஈழநாதம் விளம்பரப் பணிமனை, கே. கே. எஸ். வீதி. மருதனாமடம் என்னும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

தகவல் :
நா. மனோகரன்
(சகோதரன்)

(சி-5850)


மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது

உங்கள் தலை முடிகளை நவநாகரிகமாக சிகை அலங்கரித்துக்கொள்ள

ரிப்ரொப்

சிகை அலங்கரிப்பு நிலையம்

பிரதான வீதி, சங்கானை.

உரிமையாளர்: க. கணேசராசா (4337)


தமிழினத்தின் மூத்த தளபதி

## கேணல் கிட்டு அவர்களுக்கும்

அவரோடிணைந்த ஏனைய ஒன்பது
வேங்கைகளுக்கும் எமது

## கண்ணீர் அஞ்சலி

பாடிக் களித்தகுயில் படகோடு சாகடிக்க
வாடிக் கிடந்த வடநாட்டு வேட்டுவரின்
மோடி அதிகார ஆட்சிக்கு ப்பணியாது
பாடவைத்துன்னுடலை ஆகுதி யாக்கினையோ

மேருவாய் நின்றுநீ முழக்கங்கள் செய்ய
தேருலா வந்தது இந்தியக் கடற்படை
யாருமே நெருங்கா அக்கினிப் பிளம்பாய்
வங்கக் கடலதை எரித்தனை வீரா

குன்றென நிற்போம் தலை சாய்க்கோம்
நன்றாய் ப்பணிவோம் அடி பணியோம்
என்றே உலகு புரிய வைத்தாய்
என்னும் எம்தேசம் மதை க்குதையோ

(ஆக்கம் : வளவை வளவன்)

(3414) நெல்லியடி வர்த்தகர் சங்கம்

## அங்குரார்ப்பணம்

வடமராட்சி கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்து நாகர் கோயில் அகதி முகாம்களில் இருக்கும் அகதிகளின் நன்மை கருதி சமூக மேம்பாட்டுக் கழகமும், நலன் புரிச்சங்கமும் கடந்த 27 ஆம் திகதி நாகர் கோவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் திரு. எஸ். ஞானசேகரம் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

பாடசாலை அதிபர் திரு. எஸ். வடிவேலு பிரதம விருந்தினராகவும் நாகர் கோவில் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. எஸ். தெய்வேந்திரம், வடமராட்சி கிழக்கு தமிழர் புனர்வாழ்வுப்பிரிவுப் பொறுப்பாளர் திரு எஸ். பிரபாகரன் உட்பட இன்னும் பலர் சிறப்புரையாற்றினார்கள்.

## துப்பாக்கிச் சூடு

(குருநகர்)

அராலித் துறை- மற்றும் பூநகரி - கல்முனை சிறிலங்கா இராணுவமுகாம்களில் இருந்து நேற்று அதிகாலையிலும் பிற்பாடும் கடல் ஏரியில் சென்ற மீன்பிடி வள்ளங்களை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

நாவாந்துறை, கொட்டடி, பூநகரி- பள்ளிக்குடா கடற்பிராந்தியத்தில் நின்று மீன்பிடியில் ஈடுபட்டவர்கள் தெய்வாதீனமாக பாதிப்பு ஏதுவுமின்றிக் கரை சேர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (24), (21)

## விரைவில் தீர்வு ஏற்படுமாம்

இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு மிகவிரைவில் ஏற்படுமென்று இலங்கைக்கான இந்தியத் தூதுவராக பணியாற்றி தனது சேவையை முடித்துச் சென்றிருக்கும் என். என். ஜா தெரிவித்துள்ளார்.

## உறவுகள் நாடகம்

யாழ்ப்பாணபல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இன்று பிற்பகல் நான்கு மணியளவில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் உறவுகள் நாடகத்தை மேடையேற்ற உள்ளது.

# இந்தியா புரிந்த கொலையும் ஐரோப்பாவின் மௌனமும்

**தளபதி கிட்டு உப்படப் பத்து வேங்கைகளின் நடுகல் திரைநீக்கம் செய்யும் வைபவம் தீருவிலில் நேற்று முன்தினம் இடம் பெற்ற போது நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆற்றிய உரையை இங்கே தருகின்றோம்.**

தளபதி கிட்டு எதற்காக தமிழீழம் வந்தார்?

அவர் வரும் பொழுது ஒரு சமாதான திட்டத்தைக் கொண்டு வந்தாரா? அந்த சமாதானத்திட்டம் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது? இதனுடைய பின்னணி என்ன? ஐரோப்பிய நாடுகள் இதில் ஈடுபட்டுள்ளனவா? எந்தளவிற்கு இந்த சமாதானத்திட்டத்தில் ஐரோப்பிய நாடுகள் பங்கு வகித்தன? இந்தியாவிற்கும் ஏற்கெனவே இது பற்றித் தெரியுமா? இந்தியாவின் பங்கு என்ன? என்ற சில முக்கிய விடயங்கள் பற்றி இதுவரைக்கும் உங்களுக்குத் தெரியாத விடயங்கள் பற்றி இங்கு எடுத்து விளக்க விரும்புகிறேன்.

உங்களுக்குத் தெரியும் நாங்கள் தளபதி கிட்டுவை மேற்குலகத்திற்கு அனுப்பியதன்காரணம். மேற்குலகநாடுகளுடன் தொடர்புகொண்டு அவறறின் ஆதரவைப் பெற்றுஎமதுபிரச்சினைக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவுபெறவேண்டும். அதற்காக எமது மத்தியகுழு உறுப்பினர் ஒருவர் மேற்கு ஐரோப்பாவில் செயல்படவேண்டும்,அவர் பல தொடர்புகளை எடுக்க வேண்டும் என்ற நோக்குடன் தான் தலைவர் பிரபாகரன் தளபதி கிட்டு அவர்களை மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே இங்கிலாந்திற்கு அனுப்பி வைத்தார்.

அவரை இங்கிலாந்திற்கு அனுப்பியதில் எங்களுக்கும் முக்கிய ஒரு பங்குண்டு. நாங்கள் கொழும்பில் பேச்சுவார்த்தையை நடாத்திக் கொண்டிருந்த பொழுதுதான் கிட்டுவை நாங்கள் தங்கியிருந்த விடுதிக்கு கொண்டு வந்து, அங்கு அவரை தங்கவைத்து, பிரித்தானிய தூதர் கிட்டுவை நேரில் வந்து சந்தித்து. அவர் அளித்த உறுதி மொழிகளின் பேரில் தான் நாம் கிட்டுவை இங்கிலாந்திற்கு அனுப்பி வைத்தோம். கிட்டு யார்? அவரின் அந்தஸ்து என்ன? அவர் ஒரு விடுதலை இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவர். அவர் வெளிநாடுகளில் என்ன பங்கு வகிப்பதற்குச் செல்கின்றார்? என்பது எல்லாம் இங்கிலாந்திற்கும் மற்றும் சில நாடுகளுக்கும் தெரியும். ஏனென்றால் கொழும்பில் இருந்து கிட்டு லண்டனுக்கு அனுப்பப்படுவதற்கு முன்னதாக பல தூதர்களை கொழும்பு ஹோட்டலில் வைத்து சந்தித்து தமது நோக்கத்தை விளங்கப் படுத்தினார். பிரித்தானிய தூதுவர் தான் நேரடியாக கிட்டுவிடம் கொண்டு வந்து கடவுச்சீட்டைக் கொடுத்து அவரை விமானத்தில் பத்திரமாக அங்கு செல்வதற்கான வசதிகளை செய்து கொடுத்தார். ஏன் நான் இதை சொல்கிறேன் என்றால் இந்த சமாதானத்திட்டத்தில் பிரிட்டனுக்கு முக்கிய பங்குண்டு.

உங்களுக்குத் தெரியும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஐம்பதுநாடுகளில்கிளை அமைப்புகள் இருக்கின்றன. லண்டன்சென்ற கிட்டு இந்தகிளை அமைப்புகளை எல்லாம் ஒருங்கமைத்து ஒன்றுபட செயல்பட வைத்து லண்டனில் எங்களது சர்வதேச தலைமையகத்தை அமைத்தார். நீண்டகாலமாக செயலிழந்து போய்க்கிடந்த பல அமைப்புகளை செயற்படச்செய்தார். வெளிநாடுகளில் அவர் நடாத்திய பிரசாரம், அவர் சந்தித்த இராஜதந்திரிகள், புரட்சித் தலைவர்கள் எமது போராட்டத்தை சர்வதேச அரங்கில் முன்னெடுத்துச்செல்ல அவர் செய்தகாரியங்கள் ஏராளம். அவர்மேற்கு நாடுகளில் இருந்து தமிழீழமக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு அரசியல் தீர்வுகாண வேண்டும் என்ற விடயத்திலேயோ சமாதானத்தை உருவாக்க வேண்டும் என்ற விடயத்திலேயோ சில உருப்படியான காரியங்களை செய்துகொண்டிருந்தார். உங்களுக்குத் தெரியும், ஒரு சில மாதங்களுக்கு முன்னர் குவேக்கஸ் சமாதான குழுவொன்று மேற்குலகத்தில் இருந்து இங்கு வந்தது. இவர்கள் இங்குவரும்பொழுது கிட்டுவையும், திலகரையும் சந்தித்துவிட்டு கொழும்பில் உள்ள முக்கிய அமைச்சர்களையும் சந்தித்து விட்டுத்தான் இங்கு வந்தார்கள். இங்குவந்து இது சம்பந்தமாக சில யோசனைகளை எங்களிடம் தெரிவித்தார்கள்.

ஆனால் எந்த அடிப்படையில் பேச்சுக்களைநடத்துவது? எங்கு பேச்சுக்களை நடத்துவது? யாருடன் பேச்சுக்களை நடத்துவது?என்ற பிரச்சினை அந்த நேரத்தில் இருந்தது. நாங்கள் இங்கேயிருந்து முன்பு போல கொழும்புக்கு போய் பேச்சுக்களை நடத்தமுடியாது எப்படிப் போவது? சிங்கள இராணுவத்தை நம்பி கொழும்பிற்குப் போய் பேச்சுக்களை நடாத்த முடியாது. எனவே வெளிநாட்டுத் தலைநகரமொன்றில் வைத்து பேச்சுக்களை நடாத்துவதற்கு திட்டம் தீட்டப்பட்டது. இதில் கிட்டுவும் திலகரும் பங்கெடுக்க வேண்டியது அவசியமாயிருந்தது.

இங்கிருந்து தலைவர் பிரபாகரனின் பிரதிநிதிகளாக ஒரு சிலர் வெளிநாட்டிற்குப் போகலாம். வெளிநாட்டு தலைநகரமொன்றில் வைத்து இந்தப் பேச்சுக்களை நடத்தலாம் என்று குவேக்கஸ் சமாதானக்குழு எம்மிடம் தெரிவித்தது. ஆனால் அப்பொழுது ஒரு பிரச்சினை எழுந்தது. எதைப்பற்றிப் பேசுவது? வடக்கு — கிழக்கு மாகாணத்தை இணைத்து தமிழர் தாயகத்தை ஏற்றுக் கொள்ளாத சிங்கள அரசிடம் எந்த அடிப்படையில் பேசுவது சமஷ்டியைப் பற்றியா பேசுவது? இதில், சமஷ்டி என்று சொன்னது வடக்கு கிழக்கு ஒன்றாக இணைந்து தமிழர் தாயகம் ஏற்றுக்கொள்ளப் பட்ட அடிப்படையில் ஒரு சமஷ்டி யோசனை வந்தால் அதைப்பற்றிப் பேசலாம். ஆனால் சிங்களவர்கள் எதையுமே உருப்படியாக தருவதற்கு தயாராக இல்லை. அப்பொழுது நாங்கள் ஒரு யோசனையை இந்த குவேக்கஸ் சமாதானக் குழுவிடம் கூறினோம்.

ஒரு இடைக்கால தீர்வொன்றை ஏற்படுத்துவோம். முதலில் யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவருவோம். தமிழீழத்தில் ஒரு சமாதான சூழ்நிலையை உருவாக்குவோம். எமது மக்கள் இந்த கடந்த மூன்று ஆண்டு போரினால் மிகவும் நொந்து போயிருக்கிறார்கள். தாங்கொணா பளுக்களை சுமந்து நிற்கின்றார்கள். இந்த மக்களுக்கு ஒரு நிம்மதி வேண்டும். அந்த மக்களுக்கு ஒரு சமாதான சூழ்நிலை வேண்டும். ஆகவே முதலில் இந்த சமஷ்டி இணைப்புஅவற்றைப்பற்றிபேசுவதை விட்டு விட்டு முதலில் ஒரு சமாதான சூழ்நிலையை உருவாக்குவோம். மக்கள் மத்தியில் ஒரு நல்லெண்ண நம்பிக்கையை பிறப்பிப்பதற்கு சிறிலங்கா அரசு ஏதாவது உருப்படியாகச் செய்ய வேண்டும். இதற்கும் ஒரு திட்டம் கொடுத்தோம். முதலில் இரண்டு தரப்பும் யுத்த நிறுத்தப்பிரகடனம் செய்வோம். சிங்கள அரச படைகள் சில இடங்களில் இருந்து தனது படைகளை வாபஸ் பெற வேண்டும். குறிப்பாக எங்களது குடியிருப்புக்களை ஆக்கிரமித்திருக்கும் பகுதிகள்,எங்களது போக்குவரத்துப் பாதையைத் தடுத்து நிற்கும் பகுதிகள்,எமதுகுடாநாட்டை முற்றுகையிடும் நோக்கில்இராணுவம்நிலை கொண்டுள்ளபகுதிகள் ஆகியவற்றிலிருந்து சிங்களப்படை வாபஸ் பெற வேண்டும். அதற்குபின் ஒரு இடைக்காலநிர்வாகஒழுங்கிற்கு ஏற்பாடு செய்வோம். இந்த இடைக்காலநிர்வாக ஒழுங்கு புலிகளின் நிர்வாகத்தின் கீழ் இருக்கவேண்டும். ஒருகுறிப்பிட்டகாலம்வரைஒரு ஆண்டோ இரண்டாண்டோ இந்த இடைக்கால நிர்வாக ஒழுங்கு இருக்க வேண்டும். இந்தக் காலகட்டத்தில் தமிழீழ மக்களுக்கு நிவாரணம் புனருத்தாரணம், மற்றைய சகல வசதிகளையும் சிறிலங்கா அரசு செய்து கொடுத்து தமிழீழ மக்களின் நல்லெண்ணத்தைப் பெறவேண்டும். நம்பிக்கையைப் பெற வேண்டும். துன்பதுயரத்தில் இருந்து மக்களுக்கு ஒரு வழியைக் காட்ட வேணுமென்று கூறினோம்.

இப்படியான ஒரு சமாதான ஒழுங்கை கொண்டு வாருங்கள் நாங்கள் ஒத்துழைக்கிறோம். போர் நிறுத்தத்திற்கு நாங்கள் தயார். இந்தத் திட்டத்தின் விபரம் பற்றி வெளிநாட்டுத் தலை நகரமொன்றில் பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம். இவ்வாறாக எமதுயோசனையைகுவேக்கஸ் சமாதானக் குழுவிற்குச்சொன்னோம். இந்த யோசனை பற்றி குவேக்கஸ் குழு சிங்கள அரசுடன் பேசியது. பின்னர் சில ஐரோப்பிய நாடுகளுடன் இத்திட்டம் பற்றி பேசியது. அவர்கள் சொன்னார்கள் புலிகளின் நிலைப்பாடு சரி. இந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க முடியாது. உடனடியாக அரசியல் தீர்வு வராது. ஆகவே இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டதை யடுத்து சிபார்சு செய்யப்பட்ட ஒரு வடிவத்தில் ஒரு இடைக்கால ஒழுங்கைச் செய்யலாம் என குவேக்கஸ் குழு ஐரோப்பிய நாடுகளுடன் பேசியது. இதற்குப் பின் இந்த சமாதானக் குழு இங்கிலாந்து சென்று கிட்டு, திலகருடன் தொடர்புகொண்டது. இந்த யோசனைகள் குறித்துப் பேச வேண்டும். எப்படிப் பேசுவது? எங்கு பேசுவது? இது பற்றிய விபரமான விடயங்கள் கிட்டுவிற்கும், திலகருக்கும் தெரியும்.

இதனிடையில் ஒரு சிறிய பிரச்சினை. இங்கிருந்து நாங்கள் யாராவது இங்கிலாந்திற்குப் போவதாக இருந்தால் கப்பல் மூலம் செல்ல ஒரு மாதத்திற்கும் மேலாகலாம். விமானம் மூலம் செல்வதானால் கொழும்பிற்குச் செல்ல வேண்டும். அது இந்தச் சூழ்நிலையில் நடைமுறை சாத்தியமற்ற ஒரு விடயம். இத்தருணத்தில் குவேக்கஸ் சமாதானக்குழுஎமக்குஅறிவித்திருந்தது இங்கிருந்து வருபவர்கள் இந்தியாவிற்கு வந்தால் இந்தியாவிலிருந்து லண்டனுக்கு வரலாம் என்று ஆனால் நாங்கள் இங்கிருந்து வெளிக்கிடுவதற்குமுன்பாக இந்த சமாதானத்திட்டத்தின்விபரங்கள்; இலங்கை அரசின் நிலைப்பாடு; மேற்கத்தேய ஐரோப்பிய நாடுகள் கொண்டுள்ள நிலைப்பாடு; இங்கிலாந்தில் இப்பேச்சுக்கள் நடத்துவதற்கான சூழல் எப்படிஇருக்கிறது என்பது பற்றி அங்கிருந்து எங்களுக்கு சில விபரங்கள் தேவையாக இருந்தது தலைவர் பிரபாகரனுக்குச் சைகை வார்த்தைகள் மூலம் இப்படியான விடயங்களைக் கொடுக்க வாய்ப்பில்லை. ஆகவேதான்கிட்டுவரும்போது இந்த விபரங்களைக்கொண்டு வந்தார். இது இந்தியாவிற்கு நன்கு தெரியும். ஏனென்றால் இந்த சமாதானக் குழு ஒரு வாரம் வரை இந்தியாவில் தங்கியிருந்தது. புதுடில்லியில் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளைப் பார்த்துப் பேசியிருந்தது. பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளோடும் பேசியிருந்தது, புலிகளின் போக்குவரத்திற்கு இந்தியா உத்தரவாதம் அளிக்குமா என அவர்கள் கேட்டிருந்தனர். அப்போது புலிகளின் போக்குவரத்திற்கு உத்தரவாதம் அளிப்பதாக இந்தியா தெரிவித்திருந்தது. இதற்கான ஆவணங்கள் எம்மிடம் உண்டு.

அதாவது எம்மை வெளிநாட்டிற்கு கொண்டு செல்வதற்கும் இந்தியாவின் உதவியுடன்கொண்டு செல்வதற்கும்-போக்குவரத்திற்கு வசதி செய்வதற்கும் இந்தியா இணங்கியதாக இவர்கள் சொன்னார்கள். ஆனால் என்ன நடந்தது? ஏன் இப்படி இந்தியா ஒரு வாக்குறுதியைக் கொடுத்து விட்டு கிட்டுவின் கப்பலை இடைமறித்தது? இந்தியாவிற்கு தெரியும் தளபதி கிட்டு ஏன் வருகிறார்? எதற்காக வருகிறார்? இந்த சமாதானத் திட்டம் எத்தகையது? என்பது பற்றியெல்லாம் தெரியும்.இதில்,உண்மைநிலை என்னவென்றால் ஐரோப்பிய தலையீட்டை இந்தியா விரும்பவில்லை. அதனால் இந்தியா இந்த விடயம் மிக இரகசியமாகவே இருக்க வேண்டும்என்று தெரிவித்திருந்தது. மிகவும் இரகசியமாகஇந்தப்பேச்சு நடக்க வேண்டும். இங்கிருந்தான போக்குவரத்துக்கள் மிக இரகசியமாக இருக்க வேண்டும் என்று இந்தியா கூறியது. ஆனால் நாம் அதை விரும்பவில்லை. இந்தியாவை நம்பி இரகசியப்பேச்சு என்று சொல்லி இங்கிருந்து டில்லிக்கு எப்படிப் போவது? இவர்கள் எம்மைக்கைது செய்து வைத்திருக்கலாம்? கொலை செய்யலாம்? கேட்பதற்கு யாருமில்லை. ஆகவேதான் தலைவர் பிரபாகரன் என்ன பேச்சு என்றுசொன்னாலும் அது பகிரங்கமானதாகஇருக்க வேண்டும்.அதிகார பூர்வமானதாக இருக்கவேண்டும். ஒரு வெளிநாட்டுத் தலை நகரத்தில் நடக்கவேண்டும். அந்த வெளிநாடு அதற்கு மத்தியஸ்துவம் வகிக்க வேண்டும் என்பன போன்ற சில கோரிக்கைகளை அவர் விடுத்திருந்தார்.

சிறிலங்காவும்இந்தப்பேச்சுக்களை இரகசியமாக நடத்த விரும்பியது. ஏனென்றால், இராணுவத்தினுள் பிரச்சினை வருமாம். மூன்று வருடமாக இராணுவம் புலிகளை எதிர்த்துப்போராடியது. நாலாயிரம் இராணுவத்தினர் இறந்துள்ளனர். 10,000 இராணுவத்தினர் காயமடைந்து ஊனமடைந்துள்ளனர் இன்னும் ஒரு பத்தாயிரம் பேர் இராணுவத்தை விட்டு ஓடியுள்ளனர். இப்படியாக இராணுவ அமைப்பே நிலைகுலைந்துபோயுள்ளது. ஆகவே மூன்று வருடமாக புலிகளை எதிர்த்துப் போராடிவிட்டு, புலிகளை எதிரிகளாகக்காட்டிவிட்டு, பின்பு விடுதலைப் புலிகளுடன் கைகோர்த்து சமாதானம் நடத்துவது என்றால் இராணுவத்தைப் பகைத்துக் கொள்ளவேண்டும். ஆகவே இராணுவத்திற்கு தெரியாமல் உலகிற்க்கு தெரியாமல்இரகசியமாகப் பேசுவோம் என்று சிறிலங்கா சொல்லியது. இந்தியாவும் இரகசியம்;பிரிட்டனும் இரகசியம் இப்படியே எல்லாரும் இரகசியமாகப்பேசுவோம் என்பதால் நாங்கள் சந்தேகப் பட்டோம்.பேசமுடியாது என்றோம். கிட்டு இங்குவந்து சகல விபரத்தையும் எமக்குத் தந்தால் இதுபற்றிநாங்கள் கூடிய ஆழமாக இந்த விடயத்தைப் பார்த்திருக்கலாம். இப்படியான சிலதகவல்களுடன்தான் கிட்டு இங்கு வந்துகொண்டிருந்தார்.அவர் எங்கிருந்து வந்தார்? எந்த விமான தளத்தில் இறங்கினார்? எந்த தென்னாசிய நாட்டின்தலைநகரில் இறங்கினார்? எங்கு படகெடுத்தார்? எப்படி வந்தார் என்பதெல்லாம் இந்திய புலனாய்வுத் துறைக்கு நன்கு தெரியும். ஆனாலும் கப்பலைத் தடுத்து நிறுத்தினார்கள் என்றால் இந்த சமாதான முயற்சியில் ஐரோப்பிய நாடுகள் ஈடுபடுவதை இந்தியா விரும்பவில்லை. என்பதைத்தவிர வேறென்ன அர்த்தம். இதைக் குழப்ப வேண்டுமென்பதைத்தவிர வேறென்ன நோக்கம் இருக்கும்?

தமிழீழ தேசியப் போராட்டம் இந்தியாவினது ஐக்கியத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும் ஒரு பெரிய அச்சுறுத்தலாக இந்தியா கருதுகிறது. பாகிஸ்தானின் அணுகுண்டை விட பிரபாகரனின் மனஉறுதிக்கு இந்தியா அஞ்சுகிறது. இங்கே ஒரு புரட்சிகர ஆயுதப் போராட்டம் வெடித்து தமிழீழம் உருவானால் அங்குள்ள தேசிய இனங்கள் சுதந்திரப் போராட்டத்தை தீவிரப் படுத்தி நாடு உடையுமோ என்று இந்தியா பயம் கொள்கின்றது. இந்தியாவில் நடைபெறும் தேசிய விடுதலைப் போராட்டங்களை விட தமிழீழத்தில் நடைபெறும் விடுதலைப் போராட்டத்திற்கு இந்தியா அஞ்சுகின்றது. ஏனெனில் இங்குஇருக்கின்றசிலபண்புகள்-எமதுமக்களிடம் இருக்கும் விடுதலை உணர்வு - விடுதலை எழுச்சி - போராளிகள் மத்தியிலுள்ள உறுதிப்பாடு தியாக உணர்வு-அர்ப்பணிப்பு இந்தியஉபகண்டத்தில் வேறெங்குமே இல்லை. அப்படியானதொரு போராட்ட சக்தி-அப்படியான போராட்டம் வெற்றிகண்டு அது இந்திய உபகண்டத்தில் பரவினால் இந்திய சாம்ராஜ்யம் இடிந்து விடும் என்று இந்தியா அஞ்சுகின்றது. ஆகவே இந்தப்போராட்டத்தை வெற்றிகாணவிடக் கூடாது என்றும், விடுதலைப் புலிகளை நசுக்க வேண்டும் என்றும் இந்தியா விரும்புகின்றது. விடுதலைப்புலிகளின் தலைமையை ஒழித்துக்கட்ட வேண்டும். ஒரு இயக்கத்தை அழிக்க வேண்டுமென்றால் உறுதி மிக்கதலைமைப் பீடத்தை உடைத்து எறிய வேண்டும். அதுதான் பிரபாகரனை எப்படியாவது அழிக்கவேண்டும். பிரபாகரனின்முக்கிய தளபதிகளை அழிக்க வேண்டும் என்று இந்தியா கங்கணம் கட்டி நிற்கின்றது. மேலும், தனது ஆதிக்க வல்லாதிக்க

[8 ஆம் பக்கம் பார்க்க]

# கொழும்பு பா. உ. வீட்டிற்கு குண்டுவீச்சும் துப்பாக்கி சூடும்

கொழும்பு மாவட்ட எம். பியும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் தலைவருமான ஹட்சன் சமரசிங்காவின் வீட்டிற்கு முன்பாக கைக்குண்டு வீச்சும், துப்பாக்கிப் பிரயோகமும் இடம் பெற்றுள்ளது.

ஹட்சன் சமரசிங்கவும் அவரது நண்பர்கள் சிலரும் வீட்டு வராந்தையிலிருந்து பேசிக் கொண்டிருந்த போதே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு ஒன்பது முப்பது மணியளவில் நடைபெற்றுள்ளது. எனினும் எவரும் காயமடையவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிசார் பின்னர் ஆறு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

## வெளிநாட்டுத்

இராணுவ கட்டுப்பாட்டுக்குளுள்ள பிரதேசத்திற்கான ஒன்பது தபால் பொதிகளை யாழ். பிரதமதபால் அலுவலகத்தில் இருந்து சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.


யாழ். பல்கலைக்கழக
இராமநாதன் நுண்கலைக் கழக கவின்கலை
மன்ற நிதிக்காக

மன்றத்தினர் வழங்கும்

**ஆடல்வல்லான்**

பரத நாட்டிய நிகழ்ச்சி

இடம்:- கைலாசபதி கலையரங்கம்
காலம்:- 24-01-93 (ஞாயிறு)
நேரம்:- காலை 9.00 மணி
பகல் 11 00 மணி
(இருநேர நிகழ்ச்சிகள்)

குறிப்பு: 17-01-93 (ஞாயிறு) நடைபெற இருந்து பிற்போடப்பட்ட நிகழ்ச்சி.

(கி-5854)



யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட
மாணவர் ஒன்றியம் வழங்கும்

**குழந்தை ம. சண்முகலிங்கம்**
அவர்களின்

**'யார்க்கெடுத்துரைப்பேன்'**
நாடகம்

இடம்: சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
காலம்: 22-01-1993 இன்று வெள்ளிக் கிழமை மாலை 4 மணி
[நுழைவுச்சீட்டுக்கள் மண்டப வாயிலில்]

| ஸ்ரீ கிருஷ்ணராம் | கண்ணன் லாட்ஜ் |
|---|---|
| சைவ உணவகம் | சைவ உணவகம் |
| பரமேஸ்வராச் சந்தி, | பரமேஸ்வராச் சந்தி, |
| திருநெல்வேலி. | திருநெல்வேலி. |

4120)


## கேணல் கிட்டு அவர்களின்
## ஆத்மசாந்தி அழைப்பு

16-01-1993 அன்று எம்மைப் பிரிந்து வீரச்சாவடைந்த எங்கள் குலவிளக்கு திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் (கேணல் கிட்டு) அவர்களின் ஆத்மசாந்திக்கான நிகழ்வுகள் இன்று 22. 01. 1993 வெள்ளிக்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறுகின்றன. இந் நிகழ்வுகளிலும், மதிய உணவிலும் பங்கு கொண்டு, அன்னாரின் நினைவுகளை பரிமாறிக் கொள்ள எமது இல்லம் வருமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்

வல்வெட்டித்துறை தாய், சகோதரன்

# முன்னணிப் பாடசாலை சிறந்த பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆகஸ்டில் நடைபெற்ற க. பொ. த. உயர்தர பரீட்சை பெறுபேறுகள் நேற்று யாழ் குடாநாட்டில் வெளியாகின.

இப்பரீட்சையில் முன்னணிப் பாடசாலைகள் சில பெற்ற பெறுபேறுகள் வருமாறு.

யாழ். இந்து மகளிர் கல்லூரி
உயிரியல் பிரிவு-
2 ஏ. பி. சி. - 1
2 பி. 2 சி. - 6
3 பி. சி. - 2
ஏ. 2 பி. சி. - 1
வர்த்தக பிரிவு-
2 ஏ. 2 பி. - 1
2 ஏ. பி. சி. - 1
4 பி. - 1
ஏ, 2 பி, சி. - 4
2 பி, 2 சி. - 6
கலை பிரிவு-
3 ஏ, சி. - 1
கணிதம்-
2 பி, 2 சி. - 1

யாழ். இந்துக் கல்லூரி
கணிதம்-
4 ஏ. - 2
3 ஏ, பி. - 7
3 ஏ, சி. - 2
2 ஏ, 2 பி - 3
2ஏ. பி. சி. - 2
2 ஏ. 2 சி. - 2
உயிரியல்-
3 ஏ, பி. - 1
3 ஏ, சி. - 1
2 ஏ, 2 பி. - 1
2 ஏ, பி, சி. - 1
வர்த்தகம்-
4 ஏ. - 1
3 ஏ, பி. - 1
2 ஏ, 2 பி. - 2

வேம்படி மகளிர் கல்லூரி
வர்த்தகம்-
4 ஏ. - 1
ஏ, 3 பி. - 1
2 ஏ, பி, சி. - 1
கலை-
2 ஏ, பி, சி. - 1
ஏ, 3 சி. - 1

கொக்குவில் இந்து
3 ஏ. பி. - 3

செங்குந்தா இந்துக் கல்லூரி
கலை-
2 பி, 2 சி. - 1

ஆங்கில திருக்குடும்ப கன்னியர்மடம் கலை-
ஏ, 3 பி - 1
ஏ, பி, 2 சி. - 1
வர்த்தகம்-
2 ஏ, 2 பி. - 1
விஞ்ஞானம்-
ஏ, 2 பி, சி - 1

யாழ். பரியோவான் கல்லூரி கணிதம்-
4 ஏ. - 2
விஞ்ஞானம்-
2 ஏ, பி, சி. - 2
ஏ. 2 பி சி - 1
ஏ. பி. 2 சி - 1
வர்த்தகம்-
ஏ, 3 பி - 1
4 பி - 1

புனித சம்பத்திரிசியார் கல்லூரி
கணிதம்-
2 ஏ, 2 பி - 1
2 ஏ. 2சி - 1
விஞ்ஞானம்-
ஏ, 2 பி, சி - 1
வர்த்தகம்-
2 ஏ. பி, சி - 1
ஏ, 3பி - 3
கலைப்பிரிவு-
ஏ, பி, 2 சி - 1

யாழ். மத்திய கல்லூரி
2 ஏ, 2 பி - 1
பி. 2 சி, எஸ் - 1
உயிரியல் பிரிவு-
4 பி - 1
3 பி, சி - 1
2 பி, 2 சி - 1
பி, 3 சி - 1
வர்த்தகம்-
4 ஏ - 1
ஏ. 3 பி - 1
ஏ. பி, சி, எஸ் - 1
பி, 3 சி - 2
பி, 2 சி, எஸ் - 3

கனகரட்ணம் மகாவித்தியாலயம்
வர்த்தகம் —
4 ஏ - 1
2 ஏ, 2 பி - 4

மகாஜனக் கல்லூரி (தெல்லிப்பழை)
4 ஏ - 1

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
4 ஏ - 1

ஹாட்லிக் கல்லூரி
4 ஏ - 2
3 ஏ, பி - 1
3 ஏ, சி - 1

வட இந்து மகளிர் கல்லூரி
உயிரியல் —
ஏ, 3 பி - 1
கலை —
2 ஏ, 2 பி - 1
ஏ, 3 பி - 1

கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி கலை —
2 ஏ, 2 பி - 1

கரவெட்டி விக்னேஸ்வரா.
பி. 2 சி, எஸ் - 1
கலை —
2 ஏ, பி, சி - 1

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம் கலை —
2 ஏ, பி, சி - 1
உயிரியல் —
ஏ, 2 பி, சி - 1

உடுத்துறை மகாவித்தியாலயம் கலை —
3 பி, சி - 1
பி, 3 சி - 1

கரவெட்டி தேவரையாளி கல்லூரி கலை —
பி, 3 சி - 1

பருத்தித்துறை மெதடிஸ் கல்லூரி உயிரியல் —
3 ஏ, பி - 2

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் வர்த்தகம் —
2 ஏ, 2 பி 1

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்
ஏ, 3 பி - 1
ஏ, 2 பி, சி - 1

உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி உயிரியல் —
ஏ, 3 பி - 1
2 ஏ, பி, சி - 1

வல்வை சிதம்பராக் கல்லூரி
உயிரியல் —
2 பி, 2 சி - 1

வல்வை மகளிர் கல்லூரி
உயிரியல் —
2 பி, 2 சி - 1
2 பி, சி, எஸ் - 1

(5, யோ)

## கண்டித்துகூட்டம்

[கொழும்பு]

பத்திரிகையாளர் மீது தாக்குதல்கடந்துவருவதைக் கண்டனம் செய்யவும், எழுத்துச் சுதந்திரம் மீது கட்டுப்பாடு விதிப்பதையும் கண்டித்துக் கொழும்பில் கூட்டம் நடத்தப்பட்டது.

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட இக் கூட்டத்தில் ஐயாயிரம் பேர் வரை கலந்து கொண்டார்கள்.

பத்திரிகையாளர் மீது தாக்குதல் அதிகரித்து வருகிறது என்றும், இதற்குப் பொலிசாரும், கூலிப்படைகளும் தான் காரணம் என்றும் பத்திரிகையாளர் தரப்பில் கூறப்படுகிறது.

## உயர்தர

படி மகளிர் கல்லூரியில்; சுதா தாமோதரம், சென் ஜேம்ஸ் கல்லூரியில்; சிவவாகீசன், எல். சேகரன், யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலத்தில்; யூட்சிறேசன் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடராசா கனகநாதன், தனபாலசிங்கம் தயாபரன் ஆகியோர் நான்கு பாடங்களில் அதிவிசேட சித்தி பெற்றுள்ளனர்"

## ஒரு

டன் 'குமண' கப்பல் பருத்தித்துறையை வந்தடைய உள்ளது

கொழும்பில் அரசாங்க அதிபர் யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நிலை தொடர்பாக எடுத்து கூறியதைத் தொடர்ந்து மேற்படி 'குமண' கப்பலில் உணவு ஏற்றும் நடவடிக்கை ஏற்பாடாகியது என தெரியவருகின்றது.

இதேவேளை யாழ். அரசாங்க அதிபர் யாழ். மாவட்டத்தில் எழுந்துள்ள நிலைமை தொடர்பாக ஜனாதிபதிக்கு ஓர் மகஜர் கையளித்துள்ளார் என்றும் தெரியவருகின்றது.

## மரண அறிவித்தல்

### இ. ச. பேரம்பலம்

(உரிமையாளர் இ. ச. பேரம்பலம் அன் கோ)

காரைநகர் வாரிவளவு பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது யாழ்ப்பாணம், இலக்கம் 90, செம்மாதெருவில் வசித்தவருமாகிய இராமு சண்முகம் பேரம்பலம் (இ ச. பேரம்பலம் அன் கோ, 50. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.) அவர்கள் 19-1-1993 செவ்வாய்க்கிழமை இறைவனடி எய்தினார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (22-1-93) அவரது இல்லத்தில் நடைபெற்று தகனத்திற்காக பிற்பகல் 1-00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

தகவல்,
மனைவி. மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(4128)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

21- 01- 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8079

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள் இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
28-9449, 42-9220, 28-3476, 41-8617, 41-9355, 27-7263, 27-9105, 27-4070, 26-1343, 26-763, 28-4672

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.